கவியுலகப் பூஞ்சோலையின்...

# முள்ளிவாய்க்கால் சுவடுகள்

கவிதைத் தொகுப்பு

தொகுப்பாசிரியர்

ஒரத்தநாடு நெப்போலியன்

கவியுலகப் பூஞ்சோலையின்...
முள்ளிவாய்க்கால் சுவடுகள்
கவிதைத் தொகுப்பு

தொகுப்பாசிரியர் : ஒரத்தநாடு நெப்போலியன்

வெளியீடு : கவியுலகப் பூஞ்சோலை,  தமிழ்நாடு, இந்தியா

நூல் வடிவமைப்பு : தமிழ்நெஞ்சம் அமின், பிரான்சு
email : editor@tamilnenjam.com

முதல் பதிப்பு : ஜனவரி 2019
பக்கங்கள் : 100
அளவு : டெம்மி 1 / 8
விலை : 120 ₹ (INR)

# உலகத் தமிழர் பேரமைப்பு

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம், விளார் சாலை, தஞ்சாவூர் - 613 006.

தொலைப்பேசி: 04362-255044 - மின்னஞ்சல்: worldtamilconfederation@gmail.com


14-10-2018

# வாழ்த்துரை

உலகின் மூத்த மாந்தரினமான தமிழினத்தின் நெடிய வரலாற்றில் என்றும் அழியாத வகையில் பதிந்திருப்பது முள்ளிவாய்க்கால் அவலமாகும். 2009ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்காலில் $1^{1}/_{2}$ இலக்கத்திற்கு மேற்பட்ட நமது மக்கள் பெண்கள், குழந்தைகள் உள்பட பதறப்பதற படுகொலை செய்யப்பட்டார்கள்.

தமிழீழத்தில் நடைபெற்ற இந்தக் கொடுஞ்செயல் என்றும் அழியாத வகையில் உலகத் தமிழ்க் கவிஞர்கள் கவிதைகளாகப் பொறித்திருக்கிறார்கள்.

கவியுலகப் பூஞ்சோலை குழுமத்தின் 3ஆம் ஆண்டு விழாவில் “முள்ளிவாய்க்கால் சுவடுகள்” என்னும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியாவதை அறிய மகிழ்கிறேன். கடல் கடந்து வாழும் தமிழ்க் கவிஞர்கள் தங்களின் எழுதுகோலில் கண்ணீரை நிரப்பி இக்கவிதைகளை வடித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்து.

அன்புள்ள,

(பழ. நெடுமாறன்)

தலைவர்.



# அணிந்துரை

'கவியுலகப் பூஞ்சோலை' அமைப்பினர் தங்கள் 3 ஆம் ஆண்டு விழாவில் வெளியிட இருக்கும் 'முள்ளிவாய்க்கால் சுவடுகள்' என்னும் இலக்கியப் பொழிச்சல் தொகுப்பு, ஈழத்தில் மட்டுமின்றிக் கடல் தாண்டிய உலகனைத்தும் பரவி வாழும் தமிழ் இலக்கியர்களின் கண்ணீராய்ப் பொங்கிப் பாய்கிறது.

''உயிரைப் பாதுகாக்க
வெட்டிய குழியில்
உயிருடன் புதையுண்ட ஆன்மாக்கள்''

என உளம் நொந்து கதறுகிறார் யாழ்ப்பாணம் (தமிழீழம்) ஐ.பிரபு.

''பால் அருந்த அன்னை மார்பில்
ஒடுங்கிவிட்ட மழலைகள்
சுவைத்திடக் கூட நேரம் தராது
முள்ளிவாய்க்காலில் ரத்த ஆறு ஓடிய வீதி''

எனக் கொதிக்கிறார் சென்னை பம்மல் (இந்தியா) ஸ்ரீசக்தி.

''வலிகள் சுமந்து
பசிகொண்ட வல்லூறுகள்
வான்வழிய இட்ட குண்டுகள்''

என்று குமுறி வெடிக்கிறார் சுவிஸ் சிவதர்சினி ராகவன்.

''கந்தகப் புகையில் மூச்சுத் திணறி
வெந்து மடிந்த உடல்களாய் ஊர்ந்தோம்''

என்று பழைய நினைவைப் பதிவு செய்கிறார் பிரான்சு கோகிலா ஜெயக்குமார்.

''பாதமிட மண்ணற்ற பரிதாப நிலை
பாதகம் நாகமாய்ப் படமெடுத்தாடியது''

என்று மனம் வெதும்புகிறார் டென்மார்க் வேதா இலங்காதிலகம்.

''கன்னியர் கற்போ காமுகர் கையகத்தே
என்னக்கா இசைப்பிரியா என்னவானாள் வையகத்தே''

என்று நெருப்பாய் வெடிக்கிறார் இலண்டன் பிரியா கணபதிப்பிள்ளை.

''தென்றலும் வெந்தணலாகி வெந்து நொந்த நாட்கள்''

என மறக்க இயலாத் துயரில் மனம் அழுத்தித் துடிக்கிறார் நெதர்லாந்து நிரஞ்சலா நிரா.

உலக நாடுகள் அனைத்தும் வாழும் உளமுடைந்த தமிழர்களின் உணர்வுக் குரலாய் உரிமை முழக்கமாய் ''முள்ளிவாய்க்கால் சுவடுகள்'' அதனின் உறுமல் கேட்கிறேன்.

'முள்ளிவாய்க்கால்' நிகழ்ந்து பத்து ஆண்டுகளின் பின்பும், இன்னும் முடங்கி ஒடுங்கி அடங்கிப் போகாத தமிழீழ விடுதலை முழக்கமாய் இந்நூல் அமைந்துள்ளது.

''மாண்டனர் தமிழரென மனப்பால் குடித்தாயோ?
மற்றுமொரு கதைசொல்லக் காத்திருக்குதென் ஈழம்''

என முழங்கும் வேலூர் சத்யா மாணிக்கமும்,

''தமிழீழம் தமிழனுக்கும் சொந்தமாகும் நாளை எண்ணியே
ஒவ்வொரு நாளையும் உறங்காமல் கடக்கின்றோம்''

எனச் சீறும் அமுதகவியும்,

''உறங்கும் உடல் எழுந்து வரும் ஒருநாள்
அன்றுதான் தமிழருக்குத் திருநாள்''

என முரசொலிக்கும் ஜெயராணியும்,

"கொன்றவர்களைத் தேடுகிறது முள்ளிவாய்க்கால் முற்றம்"

எனக் குமுறும் புவனா சற்குணமும்,

"உரிமை விதைகள் ஒருபோதும் உறங்கா
மண்ணைக் கிழித்தொரு நாள் மேலே எழும்"

என அறம் கூறும் பிரான்சு கவிவாணன் தமிழ்நெஞ்சம் அமினும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் 'தொடர்ச்சியை' நிறுவுதல், நிலைநாட்டுதல் இந்நூலின் தனிச் சிறப்பாகும் என்பேன்.

இந்நூலின் தொகுப்பாசிரியர் அன்புத் தம்பி ஒரத்தநாடு நெப்போலியனுக்கு என் இனிய வாழ்த்துகள்.

சென்னை
20-12-2018



உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தன், ஈழம்



# மதிப்புரை

முள்ளிவாய்க்கால்! நினைத்த உடனேயே நெஞ்சில் குருதி வடியத் தொடங்குகிறது. வரலாறு எத்தனையோ படுகொலைகளைத் சந்தித்ததுதான். ஆனால் முள்ளிவாய்க்கால் படுகொலையைப் போல ஒரு கொடூரமான படுகொலையை இப்போதுதான் சந்தித்து இருக்கிறது. இது இனப்படுகொலை ஆதலால் உயிர்களைக் கொல்ல முடிந்ததே உணர்ச்சிகளைக் கொல்ல முடிந்ததா?

''வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எங்கள் வெற்றித்தோள்கள்'' என்று பாடினார் பாவேந்தர். ஏனென்றால் உடல்களைக் கொல்ல முடியும் உறுதிகளைக்கொல்ல யாராலும் முடியாது. புறநானூற்றில் நாங்கள் பார்க்காத போராட்டமா? வெல்லாத போர்களா?

போர் என்றால் புலிக்குணம் பெறுவது எங்கள் உள்ளம். ஆனால், முள்ளிவாய்க்கால் போன்றதன்று. அது கொலை. திட்டமிட்ட படுகொலை. அதனால்தான் கவிஞர்களின் எழுதுகோலில் உள்ள மையெல்லாம் சிவந்து போனது. சிவப்பு கோபத்தின் அடையாளம் அல்லவா?

இந்த நூலில் உள்ள ஒவ்வொரு கவிதையிலும் அனல் தெறிக்கிறது. கண்ணீர் வடிகிறது. எத்தனை குழந்தைகளைப் பறி கொடுத்து இருக்கிறோம். எத்தனை மறக்குல மடந்தயர் மானக் குறைவடைந்தனர். இது போரா! இல்லை இனப்படுகொலை. அறிவால் முதிர்ச்சி அடைந்த உலகம் பார்த்து கொண்டு தான் இருக்கிறது. அஃகி அகன்ற அறிவு என்னாம் என்றார் எங்கள் பாட்டன் திருவள்ளுவர்.

உலகத்தீரே! உலகத்தீரே! நாக்கடிப்பாக வாய்ப்பறை அறையும் உலகத்தீரே! இன்னும் பார்த்துக் கொண்டு தானே இருக்கின்றீர்கள் கேள்விக்கணை தெறிக்கிறதே இந்தக் கவிஞர்களின் சொற்களில் கனவு வேண்டுமானால் கலையலாம். கடமைகளுமா கலையும்? அவை நிறைவேற்றத்தக்கவை அல்லவோ? பொங்கித் தணிகிறார்கள் கவிஞர்கள். இல்லை இல்லை பொங்கித்தெறிக்கிறார்கள். பரிணாமம்

என்றால் உள்ளது சிறத்தல் என்று பொருள்! ஏதாவது இருந்தால் தானே சிறப்பதற்கு என்றால் பரிணாமம் இன்னும் முழுமையாகவில்லை. என்றுதானே ஆகும்?

விலங்கு நிலை மாறவில்லையே உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு இல்லை தானே. ஏ! ஈழமே நீ இன்னும் விலங்காகவே இருக்கிறாய். அதனால்தான் உன்னை வெறும் குரங்குக் கூட்டத்தைக்கொண்டே வென்றான் ஒரு மானிடன் உலகமே பரிணாமத்தின் உச்சியில் ஏறு என்று அறைகூவுகிறது இந்த நூல். ஏறுவோம் ஏற்றுவோம்!! முள்ளாய்க் குத்தும் குற்ற உணர்ச்சியில் இருந்து விடுபடுவோம். உயர்ந்து விளங்குவோம். கவிஞர் அனைவருக்கும் நல்வாழ்த்துகள். எழுதுங்கள் எழுதிக்கொண்டே இருங்கள் உலகம் விழித்து எழும் வரை எழுதுங்கள். அப்போதுதான் உலகம் இனப்படுகொலையைத் தட்டிக்கேட்கும். அதுவரை உங்கள் எழுதுகோல்களுக்கு ஓய்வே இல்லை.

இந்த நூலைப் படிப்பவர்களுக்கும் ஒரு சொல் இதனை விலை கொடுத்து வாங்கிப் படியுங்கள். பொருளாதாரமும் ஒரு அடிப்படைதானே! நூலை விலை கொடுத்து வாங்கி நண்பர்களுக்கப் பரிசளியுங்கள். இது வெறும் கவிதை ஏடு இல்லை. உணர்ச்சிகளின் குவியல். கொந்தளிப்பு உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்! வாழிய நலனே..

அ ன்புடன்,

ஆய்வுச்சுடர். அ.த.பன்னீர்செல்வன்.

க.மு.கல்.மு

(தமிழன்பன்)

பட்டுக்கோட்டை.



கவியுலகப் பூஞ்சோலை குழுமத்தின்
மூன்றாம் ஆண்டுவிழா நிகழ்வில் வெளியிடப்படும் இந்நூல்
உலகம் முழுதும் பரவிவாழும் தமிழினக் கவியுறவுகளின்
கவிதைத் தொகுப்பாகும்.

இறுதிப் போரில் முள்ளிவாய்க்கால்
மண்பட்ட அவலங்களைக்
கவியுலகப் பூஞ்சோலையின் கவிஞர்கள்
தமது பேனா முனைகளால் சிந்திய
கண்ணீர்த்துளிகள் இங்கு கவிவரிகளாக
இடம்பெற்றுள்ளது.

இந்நூல் ஈழப்போரில் மரணமடைந்த
அத்தனை தமிழின உறவுகளுக்கும் சமர்ப்பணம்...

நீங்கா நினைவுகளுடன்...

## ஒரத்தநாடு நெப்போலியன்

நிறுவனர்
கவியுலகப் பூஞ்சோலை



நந்திக்கடலில் நம்மவர் குருதி நிறைந்தது
முந்தி தவமிருந்து பெற்றெடுத்த உயிர்கள்
தொந்தி வலிக்க பசியோடு அலறியதே
பாராமுகமாய்க் கடந்து சென்றது காலமும் சேர்ந்தே...!

மூபத்து ஆண்டுகளாய்க் கட்டிக்காத்த ஈழப்போர்
முப்படை அமைத்து எப்படையையும் தோற்கடித்ததே
சூழ்ச்சியெனும் ஆயுதம் இங்கே பலியெடுத்ததோ
சூழ்ந்த பகை எம்மவர் வாழ்வழித்ததே...!

வலிகள் சுமந்து பசிகொண்ட வல்லூறுகள்
வான் வழியாய் இட்ட குண்டுகள்
சிதைத்த உடல்களின் வலி ஆறுமா
சிங்கள அரசு ஆடிய ஆட்டமடங்குமா..!



சிவதர்சினி ராகவன்
சுவிஷ்

---

அழகிய எழில் கொஞ்சும் தேசத்தில்
ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள் சலனமற்றிருக்க
இலக்கு பார்த்து தாக்கப்பட்ட குண்டுகளிடம்
ஈக்கள், எறும்புகள் கூட மிஞ்சவில்லையே
உலகமே மௌனித்து நிற்க மரித்துப்போனோமே
ஊண், உறக்கம், உயிர் துறந்தும்
எமை ஆட்கொள்கிறது குற்ற உணர்ச்சிகள்
ஏகபோகமாய் வாழ்ந்த தமிழீழம் கானல்நீரானதே..!
ஐம்பொன் தேசம் அப்பட்டமாய்க் களவாடப்பட்டதே..!
ஒட்டுத்துணியின்றி ஓலமிட்டு ஓடும் உறவுகளை
ஓடிச்சென்று காப்பாற்ற இயலாது இருந்தேனே...
ஔகாரகுறுக்கமாய் நந்திக்கடலில் மிதக்கிறேன்... பிணமாக...



தமிழ்தம்பி,
மயிலாடும்பாறை,
தேனி(மாவட்டம்).

நந்திக்கடலும் குருதியால் கொப்பளித்ததே அன்று..!
நச்சுப் புகைகளாலும் குண்டு வீச்சிலும்..!
கொத்துக் கொத்தாய் சிதறியே எம்முறவுகள்..!
பசிக்கு அழுத பச்சிளம் குழந்தை..!

உதிரத்தோடு உறைந்து கருகிச் சிதைந்ததே..!
இரக்கமற்ற சிங்களவர் மானத்தையே சூறையாடினரே
ஆண்மகனைக் கட்டிவைத்து ஆணவத்தைக் காட்டினரே..!
பெண்கள் ஆடையினைக் களைந்து ருசித்தனரே..!

தாலியினை அறுத்த கோழையான நாளல்லவா...!
உயிர்கள் சிதைக்கப்பட்டு உடல்கள் வதைக்கப்பட்டு...!
விதைகளும் பூக்களுங் கருக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டன...!
மறக்குமா நெஞ்சம் உங்களின் கதறல்களை...!




கயல் விழி
கிழக்கு மாகாணம்,
இலங்கை


குண்டுகள் பதிந்த நம் தேசம்
குருதி ஆறாய் ஓடிய ஈழம்
பேரினவாத கழுகுகளால் கறை படுத்தப்பட்டு
குற்றுயிரில் துடி துடிப்பது தெரிகிறது

பச்சிளம் பாலகர்கள் வெட்டி சாய்க்கப்பட்டது
இச்சையுடன் வாழ்ந்த இளம் குடும்பங்கள்
கச்சை கட்டி வாழும் விவசாயிகள்
கொச்சையாக்கப்பட்டு கொன்று குவித்துச் சென்றனரே

காலை மாலை என இல்லாமல்
பருவம் வந்த பக்குவமான பெண்ணிலிருந்து
சருமம் சுருங்கி சாகப் போவோரென
கசக்கிப் பிழிந்து எறிந்து வரலாறிதுவே




ஜெயா தமிழினி

நந்திக்கடல் முழுவதும் குருதிகள் மேவிக்கிடந்தது.
பதுங்கு குழியியும் சவக் குழியானது.
வந்தோர்க்கு வாரி வழங்கிய தாய்க்குலங்கள்..
சொட்டு நீரின்றிச் செத்துக் கிடந்தது.

சனி விரதத்தில் விருந்தோம்பல் காகங்கள்...
உயிரிலா உறவுகள் உடல் குதறியது.
தாங்காத முல்லைக்கடல் பதறி அழுதது..
அதனோடும் பகை கொன்று குவித்தது.

வேண்டாத கல்லையெல்லாம் கடவுளென மன்றாட..
குண்டு மழையிலே உடல்கள் மிதந்தது.
ஆயிரமாயிரம் கண்ணகிகள் கற்பைக் கதறடித்தும்..
அக்கினியைச் சமுத்திரம் முழுங்கி கிடந்ததா..???



சண் ஜீபத்

---

கந்தகத் தீயிலே மேனி எரிந்து
செந்தணல் வீச்சிலே உயிரும் பிரிந்து
செந்நிற மானது தமிழர் தாயகம் ;
அன்னிய ஆதிக்கம் புரிந்தது பாதகம் !

வீட்டிலும் காட்டிலும் கடலிலும் கரையிலும்
உடலங்கள் உயிரற்று மயானமாய் மாறிட
அங்கங்கள் இழந்துமே உயிருக்காய் ஏங்கிட
முள்ளி வாய்க்காலும் மூச்சிழந்து போனது !

குமரிக் கண்டத்தை ஆண்ட தமிழினம் !
வன்னி மண்ணிலே விளைந்த மாவீரம் !
வஞ்சகர் துரோகிகள் கூடியே அழித்திட ;
உலகமே கைகட்டி வேடிக்கை பார்த்தது !



வேலணையூர் ரஜிந்தன்.
வேலணை,
யாழ்ப்பாணம்.

கொள்ளைக் காரச் சிங்கள நாய்கள்
கள்ள மற்ற கன்னித் தமிழரைத்
துள்ளும் மான்களைத் துரத்தியே தின்னும்
குள்ள நரிகளைப் போலவே கொன்று
துள்ளத்துள்ளத் தோண்டிப் புதைத்தனர்!

கொத்துக் கொத்தாய்த் தமிழரின் உடல்கள்
மொத்தை மொத்தையாய் மூலையிற் கிடந்தன
எத்திப் பிழைக்கும் ஈனச் சிங்களர்
தத்தித் தத்தித் தளர்நடை யிட்டனர்!

பதுங்குக் குழியிற் பதுங்கிய தமிழரை
ஒதுங்கா வண்ணம் ஒழித்துக் கட்டினர்!
முள்ளி வாய்க்கால் உடலந் தன்னில்
கொள்ளி வாய்ப்பேய்ச் சிங்கள நரிகளே!



புலவர் செயராமன்

---

இலங்கையில் வாழும் மக்களின் வாழ்க்கை
விலங்குகள் போல நடத்தும் கொடுமை
கலங்கிய நெஞ்சம் பதற்றம் கொண்டு
உறவுகளை விட்டு விரைந்தனர் எங்கோ ?

அரும்புகளைக் கொன்று குவித்தனர் சிங்களம்
எறும்பைப் போலே நசுக்கிய சங்கடம்
கரும்பாக இனிக்கும் தமிழர் சமூகம்
துரும்பாக நினைத்து வதைக்கும் கொடூரம்

முள்ளி வாய்க்காலில் செத்தது தமிழன்
அள்ளிக் குழிக்குள் புதைந்தான் வெறியன்
சொல்லி அழித்த மிருகங்கள் ஆனதால்
தள்ளி நின்று பார்த்தது தமிழகம்.



க.ச.சந்திரசேகரன் சங்கரலிங்கம்
அவிநாசி

மூனுவேளை சோற்றுக்கே மூக்காலே சுழிபோட்டு..
நேசமிகு உறவோடு நொந்து வாழ்கிறோம்..
ஒன்றுபட்டு வாழ்ந்திடவழிவகையைக்காட்டிய...
தமிழனுக்கே தமிழனிங்கேபாதுகாப்புஇல்லையடா ..

ஆடுகின்றார் மக்களாட்சி மரணத்தைச் சேமிக்க...
அங்கங்கே பாயுதம்மா உயிர்பலிசெய்திடவே ...
தொலையாத அன்பினிலே மடியுதடி உயிரினங்கள்...
நொறுங்கிய மனதோடு வாழ்வியலும் துயரானதே..

போராட்டம் பலகண்டு குருதிசிந்தியதமிழர்கள்..
ஒன்றுபட்டு திரண்டுவந்தால்மகாபாரதம் உருவாகும்..
வேட்டை காவலனாய் காவல்காக்க வேண்டியவரே..
தன்பசிக்குத் தன்பிள்ளையை உணவாக்கிக்கொள்கின்றான்...

பாலக்காட்டு சுந்தரம்



முழுமையடையாத ஆசைகளுடன் முள்ளிவாய்க்கால் சரீரம்.
கொள்ளிவைக்காமல் அள்ளிவைக்கப்பட்ட ஆத்மாக்களின்கூடுகள்.
காரணமின்றிக் கந்தகம்தீய்த்த சந்தன மேனிகள்
வெந்தும் வேகாமலும் வீழ்ந்துபோன உடல்கள்
சதிவலையில் சறுக்கிவிழுந்து விதியென்று வீழ்ந்தவைகள்
முடிசூடிட தலைவனுக்காக மண்மடிதேடிய உயிர்க்காவிகள்
வலிகளையே உளிகளாக்கி வடித்திட்ட வண்ணவோவியங்கள்
தமிழன் என்பதால் தறிக்கப்பட்ட மனிதமரங்கள்
வந்தவன் வலிதந்ததால் வெந்துவீழ்ந்த உடலங்கள்
முள்ளிவாய்க்காலுக்கு முகவரி கொடுத்த முத்துக்கள்.
வெள்ளைக் கொடிக்குள் பூசப்பட்ட சிவப்புச்சாயங்கள்
முள்ளிவாய்காலில் மீண்டெழும் உணர்வின் வித்துடல்கள்.

வளையூர் இளங்கவி



முள்ளிவாய்க்கால் சரீரத்தின் சரித்திரம் அறிவீரோ
எரிந்தன உயிர்கள் பற்றியே எங்கெங்கும்
பறிக்கப்பட்ட தாலிகளுடன் பெண்கள் கண்ணீருடன்
சிங்களவரின் அடக்குமுறைஆணவத்துடன் அரங்கேறியது

அராஜகம் கொண்டே ஏறிய மமதையுடன்
கெக்கலிப்பு கொண்டே தலைவிரித்தேயாடியது
எங்கெங்கும் அழுகை அவலம் கூக்குரல்கள்
எரிமலையென எரிந்தது தேசமே பொங்கி

குண்டுகள் பொழிந்தன மே பதினைட்டில்
எண்ணிலடங்காப் பிணங்களால் மோடு கட்டிய பூமியாய்
அடங்கா குருதி தாகம் ஆர்ப்பரித்தே
அடங்கியதே குழந்தைகள் கூட மிச்சமின்றியே



தென்றல் கவி (தமிழ்ச்சிட்டு)

அடக்குமுறையில் வெகுண்டு உரிமைகளுக்கானப் போராட்டங்களால்!
வெடித்த தலைவனின் ஆதிக்கத்தையும் குலத்தையும்!
வீழ்த்திய சிங்களர்களின் வெறியாட்டத்தின் உச்சகட்டங்கள்!

எத்திசையிலும் ஆயிரமாயிரம் மக்களின் ஓலங்கள்...!
மாசுக்களில் நச்சுத்தன்மை வான்வழித் தாக்குதலிலும்!
பதுங்கு குழியில் உயிர் காத்திடும்!
அவலங்களும் அரங்கேறிப் பிள்ளைகளும் கதறல்களுமாய்...!
துண்டிக்கப்பட்டத் தமிழினத்தின் கேட்பாரற்ற நிலை...!

ஊரெங்கும் குத்துயிரும் குருதி ஆறுமாய்!
கற்பழிப்புகளும் சித்ரவதைகளும் இழப்புகளும் ஊனமாய்!
உணவின்றி உடையின்றி உறக்கமின்றிச் சாட்சிகளின்றி!
முள்ளிவாய்க்காலின் சரீரத்தைச் சாம்பலாக்கியச் சரித்திரம்!




பானுரேகா. கோ
சென்னை.

ஈழத்துப் போரதின் இறுதிக் கட்டமாய்
இனமது அழிய பிணங்களாய் சரீரங்கள்
இராணுவம் கொன்று குவித்தது மலையென
இனப் படுகொலைகள் இன்னுமென் மனதிலே

கருமை படர்ந்த கந்தக மண்ணிலே
இருளாய் உறவுகள் வெந்து மடிந்திட
அள்ளி வீசிய அவனது குண்டுகள்
நள்ளிரவெல்லாம் எரிந்து நாசம் விதைத்ததே

செங்குருதிச் சேற்று மண்ணெங்கும் உயிருடல்
சிதைந்து கிடந்தது செம்மண் தரையிலே
நெஞ்சம் வெடிக்குதே நினைக்கும் இவ்வேளையிலும்
எஞ்சும் உறவுகள் இல்லாத நிலையிலே...



புவனேஸ்வரி சண்
ஹட்டன், இலங்கை.

---

பேரினம் ஒன்று பேயென நின்று
எம்மினம் அழிக்க ஏந்தின ஆயுதம்
உரிமைகள் மீட்க உயிர்தான் விலையோ
உலகம் ஒதுங்கிக் கிடந்ததும் சரியோ

முள்ளென ஆனதோ முள்ளிவாய்க்கால் நிகழ்வு
கொத்துக் குண்டுகளால் குடும்பங்களின் அழிவு
பூபாளம் கேட்கவே போராட்ட வாழ்வு
பொல்லாத சிங்களத்தால் வீடெங்கும் இழவு

உறவுகள் எல்லாம் சிதறியே வீழ்ந்தன
கனவுகள் யாவும் கானலாய்த் தெரிந்தன
வேங்கைகள் மீண்டும் வீறுகொண் டெழுந்தன
வேடனைத் தேடியே தீவெங்கும் அலைந்தன



சதா.முருகன்

குப்பைக் கிடங்கினைப் போன்றே பாதையில்
இடிந்தே கிடக்குதே தமிழனின் இல்லம்...
பேராசை கொண்ட வெறியர் கூட்டம்
பிஞ்சுக் குழத்தைகளை சூறையாட ஆசை...

தொப்புள் உறவும் இரத்த உறவும்
இனவெறிப் பேய்களுக் கெங்கே தெரியும்
காப்பற்ற யாருமின்றி மண்ணின் மீதே
இரத்தச் சரீரமாய் சரிந்தன உறவுகள்...

முள்ளி வாய்க்காலின் அல்லி ராச்சியம்
அடைக்கலம் இன்றியே மண்ணுக்குள் புதைந்தது
மீதம் உள்ளதை அள்ளிச் செல்ல
வருமோ கயவரின் வஞ்சகக் கூட்டம்...



பெ.வானிலா

---

அள்ளி அணைத்த அன்னை மண்ணே
பலி பூண்டது கொடிய பகை!
திக்கற்று திசைமாறிக் கண்டங்கள் வாழ்வு!
பகையோடு மறவர் தீரமுடன் ஆடினர்

எட்டுத் திக்கும் கொட்டியது வீரம்
தமிழிற்கு நாடா முள்ளியில் விடிவெள்ளியா
இணைந்தே சதிகள் எழுதாத விதிகள்
முள்ளி மண்ணில் ஓடியது உதிரம்

வழியறியாப் புலமதில் விழிநீர்ப் புலம்பல்
வாய்க்கால் வழியோடி உதிரங்கள் உரமாகும்
விடியல் வெள்ளி சுதந்திரமாய் எழு
தமிழின் வரலாறு பாடிடு கொடியே!



ஜெயசீலன் அந்தோணிப்பிள்ளை

அகரத்தின் சிகரமான அடையாள நகரமே
ஆகுலத்தில் கலங்கிய குருதிப் பிரவாகமே
மறத்தமிழன் வாழ்ந்த மாண்பான இடமே
மக்கிப்போன எருவில் கக்கிய தடமே

ஆணவத்தின் பிடியில் சிக்கிய மனமே
ஆண்டவனும் கண்ணை மூடியக் கணமே
நாடாள ஆசைப்பட்ட நாயக்க கூட்டமே
நம்மினத்தை அழித்த சுவடும் இதுவே

அழிந்துவிட நாங்களென்ன அரைவட்ட நீர்க்குமிழியா
ஆவேசமாய் எழுந்திடும் அருகம்புல்லடா நாம்
உடலமெல்லாம் உக்கி உரமாகிப் போனாலும்
ஒருநாள் எழுவோம் உலகை ஆள



காவத்தையூர்
பழனியாண்டி கனகராஜா

---

கொத்துக்குண்டுகளின் குரூரஓசைகள்
துண்டாகிபோனதால் துடித்தஉயிர்கள்
அங்கும்இங்குமாய் சிதறியஉடல்கள்
நந்திக்கடல்தனில் மிதப்புகளாய்ஆனதே
ஆராத்துயர்தந்த அந்தநாள்வடுக்கள்
இன்றுநினைத்து இதயம்வெடிக்கின்றது
ஏக்கம்எட்டிப்பார்க்க தாக்கம்தாளம்போட
தாக்குதல்சத்தங்கள் இன்றும்மனதில்
முள்ளிவாய்க்கால் சரீரங்களின்
அவலக்குரல் கேட்கின்றது
அடங்காத தாகமுடன்!



செ.க.முகமட் ஹுசைன்

நந்திக் கடலும் நடுங்கிப் போனது
சந்ததி அழிந்த சரித்திரம் கண்டு
கொத்துக் குண்டுகள் கொடூரத் தாக்குதல்
சத்த மின்றிச் சடலங்கள் ஆக

தூய காற்றும் விசமாய் மாற
மாய அழிவை மண்ணில் விதைத்து
பல்லுயிர் முதலாய் பந்தம் அறுபட
மாபாதகச் செயலை மனித மின்றி

பதுங்கிய குழிக்குள் சடலமாய் மாற
நாசச் செயலை நாதாரிகள் செய்ய
முள்ளி வாய்க்கால் முழுவதும் உடல்கள்
மூச்சு அடங்கி முண்டம் ஆனதே.



தங்கை பாலா ஆசினி
சேந்தன்குடி

---

முள்ளிவாய்க்கால் சரீரத்தில் மூர்ச்சையான முனகலிது
எதையெழுதும் எழுத்தாணி எம்மவரின் விம்மல்களை
இழந்திட்ட கரங்களோ உணவருந்த மறந்தநிலை
துடிப்பலைகள் நிறுத்தப்பட்டு துன்பங்களுடன் வாழ்ந்தகதை

ஒப்பாரிகளும் ஓலங்களும் தூரமாய் ரசித்தகடன்
திருப்பித்தர இயலவில்லை சூழ்ச்சிகளுக்குள் நசுக்கப்பட்டோம்
ஆழங்கள் நிரப்பப்பட்டு அதற்காகவே விழுங்கப்பட்டோம்
தாலாட்டிய வீரங்கள் தமிழரின் அவயங்கள்

தலையாட்டிய நாட்டிலோர் ஒதுக்கப்பட்ட ஊனங்கள்
ஏளனங்கள் விளையாடி ஏறிமிதித்த சூறையாடல்கள்
மனையிழந்த மண்ணகமே கரைத்துவிட்ட பிண்டமே
துடித்தபடி உருக்குலைந்து துவள்கிறோம் இன்றுமே



விஜிதா
வவுனியா.

முல்லைத் தீவின் கிழக்கினி லமைந்த
முள்ளி வாய்க்கால் கரையினி லிருந்த
கள்ளங் கபடமறியாப் பிள்ளைகள் முதியோர்
கொள்ளிப் பிசாசுகளின் கோரத் தாண்டவத்தால்
துள்ளியே துடித்தே மாண்டனர் தமிழர்...

உச்சப் போரதின் உக்கிர மெல்லாம்
உயிர்களைப் பறித்தே உதிரத்தில் மிதந்தே
ஊழ்வினை யடைந்தரோ சிங்கள வெறியர்...
எங்கே சென்று மன்றாடிப் புரண்டாலும்
இப்பாவச் செயலுக்கு இரக்கமது கிட்டிடுமோ...

அழிக்க நினைத்தது தமிழனை யன்று
அழிந்து போகுமோ விடுதலைக் குரல்கள்...



அப்துல் ரஹ்மான்
சென்னை

உண்ண உணவின்றி மாற்றுத் துணியின்றிப் பச்சிளங்குழந்தைகளும்
பாலிற்காய் அழுதபோது  நந்திக் கடலுமன்று சிந்தியது கண்ணீரை. ...
பூமித்தாயின் மடியினிலே ஆயிரமாயிரம் உயிர்கள் சிதைக்கப்பட்டு
இனவெறியர்களின் பிடியினிலே மானபங்கப்படுத்தப்பட்டு
உயிர்துறக்கும் தறுவாயிலும்...

ஒருசொட்டு நீருக்காய் உறவுகள் துடிதுடித்து மடிந்தபோதும்
அள்ளியணைக்க முடியாது தள்ளிப்போனக் கொடூரத்தை
நெஞ்சமது மறந்திடுமா...?

திரும்பும் திசையெங்கும் மயானஅவலங்கள் அள்ளிக் குவித்தனர்
பிணங்களை அங்கங்களைக்காணாது சொந்தங்கள் கதறியழ
வெந்தணல் வீசிடும் குண்டுகள் பாய்ந்திட
எம்மினம் மாண்டதோ தாயக மண்ணிலே...!



மணி தியாகேஸ்

இரத்த ஆற்றில் மேனி நனைந்து
மூழ்கிப் போனாள் தேவி நேற்று
இரக்கம் அற்ற பகைவர் சேர்ந்து
ஆட்டம் போட்டார் கண்கள் இழந்து

மண்ணில் எங்கள் உயிர்களை மாய்த்தார்
பாவம் பெண்களைப் பங்கு போட்டார்
நீதி இல்லை நியாயம் இல்லை
நாட்டில் எங்கள் உரிமைகள் பறித்தார்

இன்று உலவும் பிணங்களைக் கண்டு
ஊமைக் கண்ணீர் வேதனை கொண்டு
இறந்தும் இறவாத் தேகங்கள் பற்றி
அடங்கிப் போனாள் ஈழத் தேவி



கவிக்காவலன்
ஈழம்

கருமை படர்ந்த கந்தக மண்ணில்
கருகித் தீய்ந்தனர் குண்டு மழையால்
நந்திக் கடலும் செங்கடலானது ரத்தத்தால்
சிந்திக்கிடந்த சொத்தும் சிதைந்தஉடலும்
நிறைந்து கிடந்தது முள்ளிவாய்க்கால்முற்றத்தில்

பிஞ்சு முதல் முதியோர் வரை
பஞ்சாய் எரிந்து போயினர் சிங்கள அரசால்
துண்டாடப்பட்ட உயிர்கள் திண்டாடிய மக்கள்
பசிக்குக் கைநீட்டி உதவிகேட்க முடியாமல்
பதுங்கு குழியிலே பதுங்கிக் கிடந்த மக்கள்

சரீரங்களை வைத்து சரித்திமா படைக்கப்போகிறாய்
சிங்கள வெறியர்களே சொல்லுங்கள்



சரஸ்வதி ராசேந்திரன்

கந்தகப் புகையினில் மூச்சுத் திணறி
வெந்து மடிந்த உடல்களாய் ஊர்ந்தோம்
உணவும் மருந்தும் தடையாய்ப் போக
ஊன முருகும் எலும்புகளாய் நடந்தோம்

மிஞ்சியிருந்த உயிர் மட்டும் காக்கவெனப்
பற்றைக் காடுள்ளே பதுங்கிக் கிடந்தோம்
முள்ளிவாய்க்காலே குருதியில் குளித்தாயோ!
கொத்துக் குண்டுகளால் சிதறிப் போனாயோ!

சதைக் கூழமாய்ச் சரிந்திட்ட பிள்ளைகளை
மடியிற் சாய்த்து ஓலங்கள் இட்டாயோ!
ஓரினத்தை அழித்த சரித்திர மொன்றை
உயிர்த்திடும் விதையாய் உனக்குள் புதைத்தாயோ!



கோகிலா ஜெயக்குமார்
யாழ்ப்பாணம்
(பிரான்ஸ் )

---

ஒன்றா இரண்டா இலட்சக் கணக்கில்
கொன்று குவித்தான் கொடூரன் பக்சே!
விலங்கினும் கீழாய் வெறித்தனம் செய்து
கலங்கிடச் செய்தான் கன்னியர் கற்பை!
குழந்தைகள் உயிரின் குருதியைக் குடித்த
இலங்கைச் சிங்களன் இரக்கம் இல்லான்!
கால்கள் இழந்து கைகள் இழந்து
வாழ்வினைத் தொலைத்து வதையுமேப் பட்டுக்
குண்டுகள் துளைத்துக் குருதியும் கொட்டத்
துண்டு துண்டாய் உடல்கள் சிதறக்
கண்முன் உறவினைக் கொன்று குவித்த
பொண்டுகன் இராச பக்சே ஒழிக!
முள்ளி வாய்க்கால் முளைக்கும் மீண்டும்
வெல்லும் நாளும் விரைவில் வருமே!



பாவலர் தண்முகநம்பி

உணர்வுகள் ஒட்டு மொத்தமாய் நசுக்கப்பட
மரண ஓலங்கள் வானைப் பிளக்க
செவிடாய்ப்போன உலகத்தின் காதுகளில் இன்னும்
தட்டிக் கொண்டிருக்கின்றன அந்தக் குரல்கள்...

உரிமைகள் வேண்டி நின்ற உயிர்களை
உறைய வைத்தார்கள் குருதியில் நனைத்து
தாகத்தின் சுயத்தை அறுத்து சிதைத்துத்
தரணியிலே தவிக்க விட்டார்கள் அனாதைகளாக...

வீழ்ந்தவை ஒன்றும் வெற்றுடல் அல்லவே
வீரியத்துடன் முளைக்கும் உறங்குநிலை வித்துக்கள்
மீண்டெழுவோம் எம்மொழி காக்க என்றும்
நிலையாய் அமைவோம் எம்மண் போற்ற...



அப்துல் ரஷாக் ஏ காதர்
இலங்கை

சரீரத்தினுள் சரீரங்கள் புதையுண்ட சரித்திரத்தில் விதையான
இனப்பற்றில் முளைத்த பாச அலைகளின் சீற்றமான எழுச்சியிது..!
மனிதம் உறங்கிய வேளையில் விழித்த மிருகங்களின்
கோரத்தாண்டவத்தின் அரங்கேற்ற மேடையிது..!
உதிரங்கள் உதிர்ந்து சதைப் பிண்டங்கள் சிதைந்து
உரிமைக்காய் மீண்டுமொரு சுதந்திரப் போராட்டமிது..!
முடிவில்லாக் கோரிக்கையது! முடித்து வைக்கப்பட்டது!
உயிர்களின் பலியாகங்கள்...!
முள்ளிவாய்க்கால்கள் சடலங்களால் நிறைந்த பொழுது..!
ஒரு இனமழிக்க நடந்த வெறியாட்டத்தில் வெற்றிடமாய் நிலம்
மாறுமளவு கற்காலம்சென்ற தற்காலம்..! மொத்தமாக மீறிய
மனித உரிமை மீறலுக்கு முள்ளிவாய்க்கால்
பிஞ்சுகளின் சரீரங்களும் சாட்சியே..!
தீர்வெழுத தீர்ப்பெழுதக் காத்திருக்கும் நீதிபதிக்கு..!



சு.சிவசுப்பிரமணியன்.
புதுச்சேரி.

ரணங்களாகும் மரணங்கள் ரத்தத்தால் பித்தமாகுதே
நீதியிங்கே அநீதியாக நியாயங்கள் அநியாயங்களாக
துடிப்பிழந்த இதயங்களால் துயரங்களும் துக்கங்களும்
வன்முறையும் தீவிரவாதமும் வரைமுறையற்றுச் சுழற்றியடிக்க
மனிதநேயமும் மரணித்தது மனிதமும் மரணித்ததே
கொடுமையின் உச்சங்கள் கொடூரமாக அரங்கேறின
உதிரமிழந்து உயிரின்வலி உள்ளமெங்கும் ஊடுறுவி
சோதனைகளால் வேதனைகளும் சோகங்களால் சொந்தபந்தங்களும்
தீராத வலிகளுடன் தீர்க்க வழிகளின்றி
வஞ்சனையும் சூழ்ச்சியினால் நெஞ்சமது கொதிக்குதே
வரலாற்று ஏடுகளில் வழிந்தோடும் குருதியினால்
வருங்கால சமுதாயம் வருத்தமுடன் வாசித்திடுமே

மைதிலி ரங்கநாதன்



வெந்தணல் வீசிடும் வேந்தனை யிழந்தோம்
செந்தணல் காற்றும் செறிந்திடு மொருநாள்
சொந்தங்கள் யாவும் சோகத்தில் மூழ்கிட
பந்தங்க ளெல்லாம் பாதியில் போயின..

காந்தள் மலரிலும் காட்டிடுமெங் களின்வீரம்
காந்தத் தன்மையில் கவர்ந்திடும் நேசம்
ஏந்திய ஏவுகணை எல்லாம் மாண்டன
சாந்த மெல்லாம் சமாதியாகின யின்று..

ஈழத்தின் உடலை எரித்திட லாகாது
வேழத்தின் காம்பும் வேடிக்கையாய் யிராது
முள்ளிவாய்க்காலின் சரீரம் முளைத்திடுமே நாளை
எள்ளிநகையாடிய எதிரியை எரித்திடுமே நாளை..

ச.ப.சண்முகம்
எழுவாம்பாடி.



இந்து சமுத்திரத்தின் நித்திலம் எங்கள்
உதிரத்தில் எழுதிய சரித்திரம் மண்ணில்
உதிர்ந்தது சதியால் சத்தியம் வீரம்கொண்ட
மறவரினம் மாண்டு போனதே அநீதியில்...!

எட்டப்பன் காட்டிக் கொடுத்தான் வஞ்சத்துடன்
கட்டப்பன் கொன்று குவித்தான் துவேசத்துடன்
மட்டற்று ஓடியது உதிரவாறு சிதையுடல்களுடன்
மடைதிறந்தது கண்ணீரூற்று துடிக்கும் உயிர்களுடன்...!

கசக்கி எறிந்தனர் மொட்டினை வேருடன்
முகர்ந்து பார்த்தனர் பூக்களை நாருடன்
வெந்து மடிந்தன உயிர்கள் நாட்டில்
நொந்து மறைந்தது சூரியனும் வானில்...!



புன்னகைவேந்தி ஸமான் லாபிர்
இங்கிலாந்து

வெம்மண் பூமியைச் செம்மண்ணாக்கி,
திசை நாலிலும் ஓநாய்க் கூட்டம்.
ஓடிய மானை விரட்டிக் கவ்வி,
வீழ்ந்த உடலை வெறியோடு தாக்கி,
பூசிய தோலை கிழித்து வீசி,
வாசனை பார்த்து மேய்ந்து ஓய்ந்தது,
அப்பாவி உயிரும் மாய்ந்து, சாய்ந்தது.
சொந்த மண்ணில் சோகக் கதைகள்,
கண்ணீர் சொட்டி, எழுதிய வரிகள்,
மண்ணில் வீழ்ந்து விதையாய் மறைந்தது,
புத்தனும் இனப்பித்தனும் கண்மூடிக் கிடந்தான்,
அதர்மம் உயிர்த்தது, மொத்த உயிரும், சாய்ந்தது,
வீரம் இங்கே விதையாய்ப் போனது.
வீழ்ந்த விதைகள் நூறாய் பிறக்கும்,
மீண்டும் அங்கே உணர்வாய்ப் பிறக்கும்.



கல்யாண் சுந்தர்.
கிழக்குத் தாம்பரம், சென்னை 59

ஈழம் உருவாக வேழம் போன்று
உறுதி கொண்டு உரிமை பெற்றிட
தூக்கம் இன்றித் துயரம் கொண்டு
ஏக்கம் கொண்ட நாட்கள் எத்தனை

தமிழ்க்குருதி கொண்டு தரமான வீரத்தோடு
போரிட்டு உடைந்த உறுப்புகள் எத்தனை
ஓடும் குருதியில் உயர்வான எண்ணத்தோடு
உறவுகள் கைதூக்கும் என்ற நம்பிக்கையோடு

உறங்காத நாள்கள் கண்ணீரும் செந்நீரும்
உறவுகள் அறிந்த தீராத வேதனை
முள்ளிவாய்க்காலில் உடல் மட்டும் சரிந்தது
உயிர் மட்டும் இன்னும் சுற்றுது

சூழலும் காலமும் நம்மை காப்பாற்றாது
சுழன்று அடித்த சூறாவளி போல்
உறவைச் சாய்த்து உற்சாக ஆட்டமிட
பீனிக்ஸ் பறவை போல் பாய்ந்து வருவோம்



குமார் சுப்பையா

---

நாய்களும் பேய்களும் நன்றிமறந்த நாசக்காரர்களும்
பிசாசுகளாய்ப் பேடிகளாய் நள்ளிரவில் தூங்கிக்கொண்டிருந்த
போராளிகளையும் பொதுமக்களையும் தரைவழியில் வான்வழியில்
குண்டுமழை பொழிந்து கொன்று குவித்த

முள்ளிவாய்க்கால் நினைத்தாலும் நெஞ்சம் பதைக்கும்
கொள்ளிவாய்ப் பிசாசுகளாய்ப் பெண்களைக் கிழவியானாலும்
காமப்பசியில் சீரழித்து களிப்புற்ற நாய்களும்
உழைத்து நாட்டை வளமாக்கிய உத்தமர்களுக்கு

உரிமை மறுத்து அவர்தம் குலங்களைச் சீரழித்து
கரும்பேய்கள் களியாட்டம் போட்டநாளை மறக்கமுடியுமா
தணலாக எரியும் நினைவுகள் ஒருநாள் உருப்பெற்று
வேடிக்கை பார்த்த உலகத்தில் வீறுகொண்டெழும்



உஷாதேவி பார்த்தசாரதி

மனிதம் மடிந்து போன களம்
மரணம் தன்னையே நொந்த தினம்
விதியின் கைகளில் தமிழ் ரத்தம்
குண்டுகள் குழந்தைகள் குருதி அருந்தின
வேடர்கள் வெற்றி எனக் கொண்டாடினர்
அயல் நாட்டினர் ஆதரவாக இருந்தனர்
அநீதிக்குத் துணையாக பாவம் செய்தனர்
வேடிக்கை பார்த்த மனித மிருகங்கள்
நீதியைச் சாகடித்த தரங்கெட்ட அரூபிகள்
இனத்தை அழித்த ஈனமான இழி பிறவிகள்
மனமும் மாறும் நீதி தோன்றும்!

பா.கார்த்திகேயன்
தாராபுரம் திருப்பூர் மாவட்டம்
தமிழ் நாடு



சிவந்த வானத்துடன் சிவந்தது கடலும்
சிரம்பல கண்டும் கொதிக்க வில்லை
அலைகடல் அது அமைதிக் கடலானது!
அழிந்த மனிதமும் இந்துமாக்கடலோடு ஒன்றியது!

வழிந்தோடிய இரத்தத்தின் ஈரம் உணரவில்லை
விழிக்காத ஐநாவின் தூக்கம் கலையவில்லை
எத்திசையும் புகழ்மணந்த வீரமது சாய்ந்திடவே
எட்டுத்திசை மனிதமும் குருடாய்ப் போனது!

இனப்படுகொலை கண்டும் விழிக்காத இவ்வுலகிற்கு
மறமதை ஏந்தி எழுத்தாணியில் உரைக்கிறேன்!
சிங்களத்தின் தலை முற்றிலுமாய் சாய
விதைக்கப்பட்டதே முள்ளி வாய்க்கால் சரீரம்!

ச.கனகசுப்புராஜ்



பேய்கள் பிணந்தின்னும் ஓநாய்கள் உயிர் தின்னும்
நாய்களை அவர்களுடன் ஒப்பிட்டுப் பேசாதீர்
நன்றியைக் கொன்றவர்கள் நாசக்காரக் கும்பல்கள்
உரிமை கேட்டவனை
மேலோகம் அனுப்புதற்கு மிலேச்சனுக்கு அதிகாரம்
எம்மிலேச்சன் கொடுத்தான் பற்றி எரிகின்ற வீடுகளும்
மனிதர்களும் சுட்டு வீழ்த்திட்ட 'மனமில்லாப்
பிசாசுகளும் டாங்கிகளும் குண்டுகளும் கோரத்
தாண்டவத்தைக் கொலுவேற்றிக் கொண்டிருக்க அய்யோ
தலைவனையும் அன்றோ தாரை வார்த்து விட்டோம்.
எங்கும் பிணக்காடு எல்லாம் தமிழ்க் காடு
தமிழ் மனிதம் அங்கே தற்காலிக கொலையேற்றம்
ஏ! பிணந்தின்னும் பேயே முள்ளிவாய்க்கால் உனக்கு
கொள்ளிவாய்க்கால் ஆகும் !தமிழன் செத்தது போல்
நீயும் உன் இனமும் அழிக்கப்படும்!
அறம் பாடும் தமிழே இதை ஆற்று!

பாவலர் வீரவாணன்



---

என்ன வாழ்க்கை இது? எண்ணியே பார்க்கா
வண்ணமாய் வேதனை வாழ்க்கையாய் ஆனதும்...
சொல்லவே இயலா; தீச் செயல்களால் பெண்கள்
பலியென ஆகி; கற்பைப் பாதையில் இழந்ததும்...

கல்வியே இலக்கெனக் கொண்டதெம் பாலகர்
செல்லிலே சிக்கிக் கருகிச்  சிதறியே போனதும்...
பள்ளியே வாழ்வெனத் தம் பாதையில் இருந்தவர்
முள்ளிலே சேலையாய் முதுகோடு சேர்ந்ததும்...

உலகையே உலுக்கிடும்; தீய உருக்களாய்
ஆனதை; மனம் துலங்கிடும் அமைதி
காண தூதுபோ வெண்புறாவே...

செ.இஸ்ஸத்,
ஏறாவூர், இலங்கை.



முல்லைக்கடல் வந்து முத்தமிடும் ஈழமண்ணில்
குருதிக்கடல் பாய்ந்த கோரமான நாட்கள்
தமிழனின் உடல்குவித்த பிணக் குவியலிலே
சிங்களத்தின் ஓநாய்கள் ஓலமிட்ட நாட்கள்

தாய்மையின் மார்பறுத்த தரங்கெட்ட ஈனர்களால்
தமிழனின் உடல்சிதைத்துக் குருதி ருசித்தனரே
கந்தகப் புகைகொண்ட கனரக ஆயுதத்தால்
வீழ்ந்த உடல்கள்மேலே வெற்றிவிழாக் கொண்டாட்டம்

மாணத்தமிழன் மாண்ட இடம் முள்ளிவாய்க்கால்
மாண்டு போயிடாது மறத்தமிழன் தனிவீரம்
காலம் வரும்வரை காத்திருப்போம் வெறியுடனே
சரிந்த சரீரத்தின்மீது சபதமிட்டுச் சொல்கின்றோம்



மாணிக்கம் இளங்கோ
மூதூர், திருகோணமலை
தமிழீழம்

---

உண்ணுகிற உணவினிலே மண்அள்ளி வைத்தோமா?
பாதையிலே முள்மூலம் பாதத்தைத் தைத்தோமா?
புத்தனின் கொள்கைகள் புறந்தள்ளப் பட்டனவா?
மனிதநேய மாண்புகள் மறந்துபோய் விட்டனவா?

அரவணைக்க வேண்டியவன் ஆயுதத்தை எடுத்தாயே!
துணையுடனே சூழ்ச்சிசெய்து போர்தன்னைத் தொடுத்தாயே!
சினம்கொண்டு தமிழென்ற இனம்தன்னை ஒழித்தாயே!
உயிர்ப்பிச்சை கேட்டுவந்த உறவுகளை அழித்தாயே!

முள்ளிவாய்க்கால் வந்தெமக்குக் கொள்ளிவைத்துச் சென்றாயே!
கொடியவர்கள் பட்டியலில் முதலிடத்தில் நின்றாயே!
யுத்தத்தில் மக்களையே கொன்றுதான் குவித்தாயே!
கொடுமைகள் கண்டேநீ கொந்தளிப்பாய் புவித்தாயே!



துரை. பாலாஜி,
பட்டுக்கோட்டை.

முள்ளாகித் தைத்திடும் முடிவுறாத் துயரங்கள்...
மண்ணை நேசித்து கண்ணாகப் போற்றிய
அப்பாவி உயிர்கள் தப்பாக மாண்டனர்...
நாற்பதாயிரம் குரல்களின் தணியாத ஓலங்களிலும்
கரைந்திடாத கல் நெஞ்சம் படைத்தவர்கள்
ஆயுதத்தால் நெரித்தார்கள் நியாயத்தின் குரல்வளையை...
நெடிதுயர்ந்த வானமாய் எல்லையற்று விரிகிறது
முள்ளிவாய்க்காலின் முடிவுறாத துயரத்தின் வேர்கள்...
நிகழ்காலத்தின் ஒவ்வொரு மூச்சிலும் தெறிக்கிறது
உரிமைகள் மறுக்கப்பட்ட ஆன்மாக்களின் அவலங்கள்...
சமாதானத்தின் பெயரால் புதைக்கப்பட்ட சொந்தங்களே...!
கல்லறையேனும் உங்களைக் கனிவுடன் அணைக்கட்டும்...

ஜெஸீமா ஹமீட்



---

கழுகுக்கு இரையான தமிழனின் உடல்கள்
இரும்புத்திரை போட்ட மனமும் மெழுகாய்க் கரைகிறது
உயிர் கொண்ட தேசத்தின் உயிர்நாடி மக்கள்
மரண ஓலம் காது கிழிக்க
மனித சடலம் சிதறிக் கிடக்க
வெஞ்சினம் தீர்க்க கங்கணம் கொண்டு
காப்பாற்ற முடியலையே கதறி அழுதோம் நாங்கள்
மண்திட்டியாய்ப் புதைகுழிக்குள் புதையுண்டு கிடக்கின்ற
செங்குருதி நீர்கலந்த சேற்றுக்கடற் கரையில்
முள்ளிவாய்க்கால் மீதுகிடத்தி கொள்ளி வைத்தான் எதிரி
கொத்துக் கொத்தாய்க் குண்டு போட்டு சாகவைத்தான் சிதறி
சிந்தியகுருதியில் நெஞ்சம் வெடிக்கிற சேதிதினமே...

செந்தூரன் மீரா
இலங்கை



முள்ளிவாய்க்கால் மக்களைக் கொன்ற கொல்லிவாய்க்கால்
முலைப்பாலுக்கு ஏங்கி முகம்புதைத்த மழலைகள்
முகங்களைச் சிதைத்து சீரழித்த கயவர்கள்
முள்ளிவாய்க்காலின் அழுகுரல் இன்னும் அடங்கவில்லை

அடங்காது தமிழரின் மனத்தில் காயத்தின்வலிகள்
எரிகணைகள் வீசிக் கொத்துக்கொத்தாய் புதைந்தவர்கள்
எறும்பினைநசுக்குவதாய் சிறியோரையும் பெரியோரையும் நசுக்கினரே
சிங்கள வெறியரின் சித்திரவதையால் சிக்குண்டனரே

குழந்தைகளையும் முதியோரையும் குழிதோண்டிப் புதைத்தனரே
குருதியாறாய்ப் பெருக்கெடுத்து வீழ்ந்து மடிந்தனரே
குருதியில் குளித்து குத்துயிராய் கிடந்தனரே
உயிரினைக் குடித்த முள்ளிவாய்க்கால் சரீரம்...



ராதை. குபேரன்

---

பிள்ளைகளின் அலறல்களை அறிந்திடாத அன்னை..
பால்வாசம் மாறாத பச்சிளம் குழந்தை..
கதறியழும் காட்சியெல்லாம் கரைத்திடுமே உயிரை
முள்ளிவாய்க்கால் மரணங்களுக்குக் கிட்டாதோ உரிமை

கட்டுக்கடங்கா உணர்வுகளைக் கட்டோடு எரித்தனரே
மிருகங்களாய் கள்ளமில்லா உள்ளங்களின் உதிரங்களை
காமப்பசி... உயிர்ப்பசியோடு உறிஞ்சியெடுத்துக் கொன்றனரே
உறவுகளின் இழப்புகளும் உயிர்க்குலைய வைத்ததுவே

சம்பவமும் சரித்திரமாய் மாற்றங்கொண்டு விட்டதுவே
காலங்கடந்த பின்னும் கண்ணீரிங்கே குறையவில்லை
மரணத்தின் கதறல்களும் நினைவினின்று நீங்கவில்லை
மண்ணிற்காக மடிந்தவர்களின் (சு)வாசக்காற்றும் ஓயவில்லை.



சுமிமுருகன்
வில்லியனூர்

கடலன்னையின் மடியினிலே கரமிணைத்து வாழ்ந்தோமே
கறையென்ன பட்டதுவோ கலகமதும் தாக்கியதே
கார்மேக மழைபோலே குண்டுமழை பொழிந்தனரே
சேர்த்து வைத்த குருதிச் சொந்தங்களையுமே

இரத்தச் சேற்றில் குழிபறித்து புதையிட்டனரே
பார்தன்னில் ஓரினமாய் மனிதனாகத் தோன்றினோமே
தோற்றமதில் மாற்றமில்லை தேற்றிடவும் ஆளில்லையே
தேய்பிறையின் சாரலைப்போல் மாயமென மாண்டனரே

நீங்கிடாத துயரங்களும் நீச்சமென நெஞ்சினிலே
மாறிடாது மறைந்திடாது மாண்டவரின் எண்ணமுமே
முள்ளியதன் மண்ணிலே கொள்ளியிட்டுக் கொன்ற கதை
சொல்லிலடங்காத் துயரமதை எண்ணிடவே மனமுருகுதே!



நூர்ஜஹான் சாலி
கொச்சின்

பீரங்கி முழக்கமும் பிதுங்கிய விழிகளும்
பீதியில் ஓடிய படபடப்பு நீங்கலயே
ஒரு காதில் ஒலிக்கிறதே அபயராகம்
ஓலங்கள் நாளத்தை அறுக்கிறதே வாளெனவே

ஆயுதத்தின் அணிவகுப்போ அச்சத்தைக் கூட்டியது
ஆகாய வீதியிலே கிபீரின் கீறல்கள்
வாழும் இனமோ வழியின்றி மாண்டது
வாட்டும் ஏக்கங்கள் வானிலே சென்றது

முல்லை நிலம் முட்புதர் ஆனதே
மூச்சடங்கிப் போனதே சரீரக் கூடுகள்
சரித்திர நினைவிடம் முள்ளிவாய் பூமியே
சாவினும் மறவேன் சதியின் எழுச்சியை...



சம்பூர் சமரன்
சம்பூர் -02, திருகோணமலை.

முத்துச் சிதறலாய் முத்தமிடும் குழந்தையெல்லாம்
சத்தமின்றி செத்துக் கிடந்ததே தெருவெல்லாம்
கன்னியர் மார்பகங்கள் காமவெறியர்களால் காயம்பட்டதே
இடிந்த வீட்டுக்குள்ளும் இதயமில்லாதவர்கள் தேடியலைந்தனரே
சுடுகாட்டிலும் வெறியேறிச் சுற்றிச் திரிந்தனரே
அள்ளிக் கொடுத்த உறவுகளின் நினைவோடுக்
கிள்ளி எடுத்த வயிற்றுப் பசியோடு
அகதிகள் பட்டம் ஏந்தி அலைபாய்ந்தனரே
இனவெறிக்குப் படுகொலை கொண்டாட்ட விழாவா
எண்ணிக்கை இல்லா உயிரிழப்பைக் கண்டு
உள்ளம் மகிழும் மடையர்கள் வாழ
முறையிட்டு அழுதிட ஆலயங்களும் அழிந்து போயின!


கு.ஜெயக்குமாரி
குன்றத்தூர் சென்னை 69




இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து இன்னல்கள் தினஞ்சுமந்து
தடம்வைத்தே நடந்துவந்தோம் தமிழனென்ற நாமத்தோடே
அடைக்கலம் தந்துவிடத் தயக்கமேதும் கொள்ளாது
வந்தோரை வாழ்விக்கும் வன்னிமண்ணோ வரவேற்றது
பதுங்குகுழிகள் வாழ்விடமாகப் பசிக்குணவோ இல்லாதுபோக
குண்டுமழையோ எங்கும்பெய்திடக் குருதியாறுமுல்லை யோடுகலந்தது
தாயின்றிப்பிள்ளை பாலுக்கழுதது தாயகமேபரி தவித்துநின்றது
சாவுவரும்நாழி கைதெரிந்துமே தடுக்கவழியோ இல்லாமல்போனது
கந்தகப்புகையெங்கும் காற்றில்கலந்திட  வந்துமே உமிழ்ந்தது
ஆகாயப்பறவைகள் சொந்தமண்ணையே சூறையாடியே
சொந்தமனைத்தையும் காவுகொண்டது முள்ளிவாய்க்கால்
அவலஞ்சுமந்தது தள்ளிடாமல் தாங்கிநின்றது
அள்ளியெடுத்தே மகவனைத்தையும் தன்மடிமீதே
தாலாட்டிக்கொண்டது.




அமிர்தினி பத்மநாதன்
அரசபுரம், பூநகரி

முள்ளிவாய்க்காலில் போரின் உக்கிரம் மிகுந்ததே
முறையாய் இனவாதிகளின் வக்கிரம் மலிந்ததே
வெள்ளைக் கொடிக்கும் அங்கே நியாயம் அழிந்தது
வேண்டா அநியாயங்கள் நிறைவாய் அங்கே அரங்கேறியது
குண்டு மழையில் குதறப்பட்டுக் குவிந்ததே சரீரங்கள்
கொடியவர்க்கு இல்லையே கொஞ்சமேனும் இதயத்தில் ஈரங்கள்
கோவில்கள் குடியிருப்புகள் யாவும் அழிந்தன
குருசேத்திரப் போராய்க் கொடுமைகள் மிகுந்தன
யுத்தக் கைதிகளாய் சிறைப்பட்டதாய் வாழ்க்கை
எத்துணையுமின்றி அகதிகளாய் எல்லாம் இழந்ததாய் யாக்கை
புத்ததர்மமும் அங்கே செத்துத் தொலைந்தே போனது
மொத்தமாய் விடுதலை விருட்சத்தை வெட்டினார்கள் வேர்களை
அவர்கள் என்ன செய்வார்கள்.

சிவம் முத்து



பிறந்த கூட்டிற்குள்ளே புல்லுருவிகள் கூட்டம்
சொந்த மண்ணிலே சுதந்திரத்திற்குத் திண்டாட்டம்
மூச்சு விடுவதற்கும் முன்னூறு தடைகளா
எதிர்த்துப் பேசுபவருக்குத் தீவிரவாதி உடைகளா?

அசுரனின் தாக்குதலில் அழிந்ததே என்னினம்
அமைதிப்படை வழியே வாழ்விழந்ததே பெண்ணினம்
கொத்துக் குண்டுகளின் கொலைவெறித் தாக்குதலில்
எங்கள் மழலைகளும் மண்ணில் வீழ்ந்தனவே

தமிழ்க் காற்றைத் தானே சுவாசித்தோம்
என்றும் சுதந்திர ஈழத்தையே நேசித்தோம்
எம்மைக் காக்கும் தலைவன் அவரின்றிக்
கடல் கடந்து நாம் தவித்தோம்

உடல் தானே இன்று வேறிடம்
எங்கள் உள்ளம் என்றும் வேரிடம்
எம்மண்ணின் காற்றே எங்களுக்கு நிரந்தரம்
என்றுமே எம்மக்களுக்குத் தனிஈழமே சுதந்திரம்...



முத்துநகர். ஆ.சுந்தர் சென்னை

தோப்புக் குயில்களாய் கூடிக்களித்த சோலை
துரத்திவந்த கழுகுகளின் கொடிய கரங்களிடை
மூச்சுக்காற்றும் கந்தகநெடி சுமந்து திரிந்தது
கொத்துக்குண்டுகள் கொட்டிய மணலாய்
பிஞ்சுகளும் பூக்களும் பிய்த்து எறியப்பட்டு
நாவறண்டு நந்திக் கடலே குருதியாறாய்
பிணங்களின் பாரத்தில் பூமியும் அழுதது
சமாதான மன்றுகள் தலைகுனிந்து வெட்கிச்
சரணடைந்தவரையும் பலியெடுத்துச் சிரிக்க
செய்வதறியாது துடித்தோமே உலகத் தமிழர்
முள்ளிவாய்க்கால் சரீரம் ஆறாத வடுவாய்

கீத்தா பரமானந்தன்



இனவெறி கொண்ட இரக்கமற்ற சிங்களன்
உலகாண்ட எம்மை உருக்குலைந்திடச் செய்தான்
மண்ணுரிமை கேட்ட மானத் தமிழனைக்
கோழைத்தனமாக கொத்துக் குண்டுகள் வீசிக்கொன்றான்
பிஞ்சுக்குழந்தைகள் என்றும் பாராமல் பிடரியில்
சுட்டு பிதற்றிக்கொண்டான் இதயமில்லா மிருகம்
வீரத்தமிழச்சிகளை மார்பில் சுட்டுப் புணர்ந்தான்
ஆண்மை அற்ற அரக்க காமுகன்
இருபது நாடுகள் ஒன்று சேர்ந்தபோதும்
தனித்துப் போராடினர் விடுதலைப் புலிகள்
ஈழத்தமிழ் தேசம் அடைவதெம் இலக்கு
பெற்றுத்தரும் பிரபாகரன் எனும் ஒளிச்சுடர்...

பி.ச.கோபால்குமார்.
இலஞ்சி, தென்காசி வட்டம்
திருநெல்வேலி மாவட்டம்.



போர் வரலாற்றிலே சோகமான பதிவு
பார் முழுவதும் அதிசயித்த நிகழ்வு
பேர் பெற்ற யுத்த மீறல்களங்கே
தீர்வின்றிப் போனதே நவீனத்திலும் இன்று

இறுதிக் கட்டப் போர் முள்ளிவாய்க்கால்
அங்கே புதைக்கப்பட்டதோ மறைக்கப்பட்ட மனிதாபிமானம்
பெண்டிர் பெரியோர் முதியோர் சிறார்களை
கேடயங்களாக்கி மூழ்கடித்தார் குருதி ஆற்றில்

கடமைக்கு வந்தோர் ஈவிரக்கம் தொலைத்தே
வானிலும் தரையிலும் தாக்கியே ஒழித்தார்
விடுதலை கேட்டோர் விதையென வீழ்ந்தார்
அழித்தவர்க்கு விடிவேது உலகம் உள்ளவரை



எம்.ஐ.எம். அஷ்ரப்

ஈனப்பிறவியாய்ப் பிறந்தவன் இங்கே
ஈழப்படுகொலை செய்தான்; குருதியில் மகிழ்ந்தான்
ஏவுகணை கண்டு பயந்திடும் மழலைகள்
எழுந்தோட முடியா தவித்திடும் முதுமைகள்
ஈவிறக்கமின்றி சாய்த்தான்; சரீரமாய் புதைத்தான்
கையெறிக் குண்டுகள் காவு வாங்கின
கபடமில்லா உறவுகள் சிதறியே கிடந்தன
குருதியில் குளித்து சரீரங்கள் உறைந்தன
தமிழனின் கனவுகள் நொடியில் புதைந்தன
உருவம் மாறிட சரீரம் கருகிட
திரைகடல் படகாய்ப் பிணங்கள் மிதந்தன
கடற்கரை மணலில் கழுகுகள் தின்றன

வேஜா (வே.ஜான் சுந்தர்)
கடவூர், கரூர்



முடியாத முடிவை முடித்த போது
விடியாத மனிதராய் வீழ்ந்து விட்டோம்
தடுமாறிப் பாதையிலே வந்து கொண்டோம்
உருமாறி உயிர்கள் பிணமாகிப் போச்சு
குண்டுகள் பாய்ந்ததில் குழந்தைகள் மடிந்தனர்
தாயும் சேயும் அணைத்தே மடிந்தனர்
பாயில் படுத்தவர் பாதையில் இறந்தார்
நோயில் வந்தவர் நொடியில் சரிந்தார்
பசியோடு வந்தவர் பாறி விழுந்தார்
கைகளை உயர்த்தியோர்
சன்னங்கள் பெற்றனர்
நீதியே இல்லா மனிதத்தைப் பார்த்தோம்
போதி மாதவன் போதனை மடிந்தது.



வதிரி.சி.ரவீந்திரன்

தமிழினப் படுகொலையால் தடுமாறி வீழ்ந்தாலும்,
தமிழீழத்தாகம் தணியவில்லை தமிழன் மீண்டெழுவான்!
சிங்கள வெறியர்களின் சித்திரவதையில் சிக்கி,
சீரழிந்து நின்றாலும் சிறுத்தையாய் சிலிர்த்தெழுவான்!
இரக்கமில்லா இழிசெயலால் இன்னுயிரே போனாலும்
இதயத்தைக் குளிர்விப்பான் இரத்தம் சிந்தாமல் சாதிப்பான்!
வஞ்சகரின் சதியாலே எஞ்சியது எதுவுமில்லை!
வெம்பிவிழுவது தமிழினமில்லை!
வீழ்ந்து கிடப்பவன் தமிழனில்லை!
விடுதலைப்போரில் உயிர் துறந்த வீரப்பரம்பரையின் பூமியில்,
வித்துக்கள் முளைத்தெழும் வீரசரித்திரத்தைத் தொடங்கும்!
முள்ளிவாய்க்கால் சோகத்தை முற்றிலும் மறக்கவில்லை!
முழுசக்தியுடன் வருவான்! முத்திரையையும் பதிப்பான்!!



கவிஞர் சுகுமாறன் கந்தையா,
புதுக்கோட்டை.

ஔவை மொழிகள் திருவள்ளுவர் வாக்குகள்
கையெடுத்து வாழ்ந்த எம் வாழ்வு
மையடித்து விட்டது போன்று இருண்டது.
கையாலாகாத நிலைக்குத் தள்ளப் பட்டோம்.

ஆசியாவின் சொர்க்கம் என்று அழைக்கப்பட்டது
ஆசிரியன் இல்லா வாழ் நிலமானது.
ஆசு வாசமற்ற குண்டு தாக்குதல்
ஆறாக இரத்தமும் சதையும் ஓடியது.

பாதமிட மண்ணற்ற பரிதவிப்பு நிலை
பாதகம் பயமின்றிப் படமெடுத்து ஆடியது.
பாவிகளிடம் நீதி கேட்டும் பலனில்லை.
பாழானது முள்ளிவாய்க்கால்! புத்தபோதனையும் இறந்தது



வேதா. இலங்காதிலகம்.
(இலங்கை) டென்மார்க்.

வெஞ்சினம் தீர்க்க கங்கணம் கொண்டு
நஞ்சினைப் பாய்ச்சி நாசமாக்கிய தேசம்
உயிரும் உணர்வும் மனிதர்க்கு துச்சம்
உயிர்கொண்ட ஈழத்தின் உயிர்நாடிமக்கள்

சதிவலையில் ஆளுமைகள் சாணக்கியத்தில் தோற்க
கருவறுத்த பூமி எம் முள்ளிவாய்க்கால்
நஞ்சிலே வாடி பிஞ்சுகளும் மடிய
கொஞ்சமிருந்த உயிர் கந்தகவாயுவில் கருகினதே.

பொய்யென யாக்கை மெய்யான உயிர்தாங்கும்
மெய்யான உயிர்சரிய யாக்கை என்னாகும் .
சண்டைகள் பெருக மக்கள் மடிந்தனர்
தமிழரின் ஏட்டில் சரிதமானது முள்ளிவாய்க்கால்.



கவிச்சுடர்சிவரமணி
திருகோணமலை.

பேரினவாதத்தின் உச்ச கட்ட உயிரழிப்பு
பெரும்படை கொண்டு இனச் சுத்திகரிப்பு
பருவம்பாரா மனித இனத்தின் ஒழிப்பு
உருவங்கள் சிதறி நின்ற பரபரப்பு

வான் மேகங்களும் கதறியழும் காட்சி
மண்ணுலகும் கண்ணீர் ததும்பும் கோரவாட்சி
ஆணவம் ஆக்கிரமித்த அருவருக்கும் வேட்கை
மணம் கொண்டோரின் பரிதாபத் தூக்கம்

பிறந்த தேசத்தைப் பிணக்காடாய் மாற்றி
வளர்ந்த உடல்கள் அதற்குள் சங்கமமாகி
துறந்த உயிர்கள் தீயில் வேகி
இறந்த உருவாய் மறைந்ததே கருகி

இனவாதம் மனிதத்தின் எதிரி நம்பு
மனமாற்றம் வேண்டுமே உயிரே தெம்பு
மனிதத்தின் மனமென்றே நீ எழும்பு
புனிதத்தின் புகழாக வேற்றுமை களைந்து.



எம்.ஐ.அலியார் சுபைர்
இலங்கை.

போர்கள் முடிந்து பல ஆண்டுகளாயினும்
முற்றுப் பெறா போர் முடிவுகளே
ரணமாக நெஞ்சில் வலிகள் கூட்டுது
உறவுகள் இழந்த சோகத்தில் பலரும்
உடலுறுப்புகள் இழந்த காயத்தில் பலரும்
அமைதியை இன்னும் தேடும் நிலையே
அழுகும் போது கண்ணீர் இல்லையே
சிரித்து வாழப் பிடிக்க வில்லையே
மரணம் என்பது தீர்வும் இல்லையே
வாழ்வது என்பது தனக்கென இல்லையே
எங்களைப் போல பலரும் உண்டு
அவர்கள் மகிழ்ச்சிக்கு வாழ்கிறோம் இன்று.

மு. மன்சூர் அலி



உதிரத்தின் உணர்வுகளெல்லாம் உடைவாள் உருவியும்
சரித்திரம் காணாது சரீரமாய் விழுந்தன!
சிதறிய உடல்களில் குருதியைத் தாண்டியும்
வழிந்தவை எல்லாம் தமிழின் தடயங்கள்!

நந்திக்கடலில் கரைவரும் அலை சொல்லும்/
நம் கறை படிந்த கதைகளையெல்லாம்!
பொங்கி வெடித்த போர் அன்று
பொசுக்கிப்போனது எம் தமிழ் உயிர்களையெல்லாம்!

புதைமணலுக்குள் வதைபட்டுக் கிடக்கும் சரீரங்களெல்லாம்
விதை முளைகளாக விளையட்டும் நாளை!
தரைதாங்கிய தணியாத எம் தாகமதில்
விரைவாகவே விடியட்டும் வரும் வேளை!



கீர்த்தி

---

மறக்க இயலுமா நெஞ்சமே! ஓர் இனத்தின்
சரித்திரத்தின் பக்கங்கள் இரக்கமின்றிக் கிழிபட்டதை
கண்ணீரும் செந்நீரும் ஒன்றறக் கலந்து
வாய்க்கால் வழியோடி நம் நெஞ்சில் கசிந்ததை

இன்றளவும் மரணத்தின் ஓலங்கள் கேட்டிருக்குதே
இரக்கமற்ற கந்தகக் குண்டுகள் -அதை
எய்தவனின் மனோ வேகம் சற்றேனும் குறையாமல்
சல்லடையாய்க் கூறு போட்டதை மறக்கமுடியுமா

செங்குருதி நீர் கலந்த முற்றத்தின் ஏட்டனிலே
சிதறிய காந்தள் பூக்கள் மறுபடி பூக்கும்
சுதந்திரத்தின் காற்று நம் மேல் படியும்
நாளைய விடியல் நமக்காய் இருக்கட்டும்



சுபஸ்ரீ

இலங்கை மண்ணிலே இனவெறி அசுரர்கள்
தமிழரைக் கொன்று குவித்தனர் படுகொலையாக,
முள்ளி வாய்க்காலில் கிடந்தன சடலங்கள்
உலகமே மனத்தால் துடித்த காட்சிகள்.
அப்பாவி மக்களின் அழுகிய சடலங்கள்,
கொத்துக் கொத்தாக க் கிடந்தன விதையாய்.

அப்பாவி மக்களைக் கொன்ற சிங்களவர் ,
கொலைகளை க் கொடுமையாகச் செய்தனர்.
தொப்புள் கொடிகளின் சாவைக் கண்டு,
உள்ளத்தில் நமக்கு உதிரம் கசிந்தது.
வீழ்ந்தாலும் தமிழரின் வீரம் சாகாது.
விதைகளாய் வளர்ந்து இமயமாய் உயரும்



இறைக்கருவி
இராம. இலட்சுமணன்
திருப்பூர்

---

மரணித்த உடல்கள் மண்ணோடு கலக்க
கணக்கற்ற உடல்கள் காற்றோடு கலக்க
மூவாயிரம் ஆண்டுகளாய் வாழ்ந்த தமிழன்
முள்ளி வாய்க்காலில் வாழ்வைத் தொலைத்துவிட்டு

சரீரங்கள் மாண்ட துயரினை எல்லாம்
சஞ்சலகளுக்கு மத்தியில் வரலாறு எழுதிவிட
தமிழனென்றத் தடங்களை ஏந்திக் கொண்டு
தமிழனென்றே தன்னையும் விதைத்துக் கொண்டு

மரணித்துப் போனாலும் மங்காத இனமே
மரணித்தும் மண்ணில் வாழுகின்ற இனமே
சரீரமாய்ப் போனாலும் சரித்திரம் சொல்லும்
வாழ்வற்றுப் போனாலும் வரலாறு வெல்லும்.



செல்வா ஆறுமுகம்
சென்னை

வெண்ணிலவு ஒழுகும் முற்றத்துத் தென்னையோடு
என் அழகுப் புன்னகையும் இறந்து
நான் இரசிக்கும் மலரும் உதிர்ந்து
உயிரில்லா உடலங்களோடு கந்தகம் கடித்துக்குதறிய
பெருவெளியொன்றில் யாருமற்ற பெருந்துயரில்
அவலக்குரலின் அந்தரிப்பில் அநாதைகளாய் நின்றோம்.

ஒன்றொன்றாய் ஒடியும் கிளைகளாய்த் தொப்புள் கொடிகள்
சதைப் பிண்டங்களாய் சிதறித் தெறிக்கும்
ஒவ்வொரு கணங்களும் குளறிக்குளறி அழுதோம்
கொலைவெறியின் உச்சமடங்காமலே அனலிடை வீழ்ந்தோம்
ஆனாலும், இரசாயன குண்டுகளினால் பொசுங்கும்
ஒவ்வொருபொழுதும் தமிழரின் தாகம் அடங்கவில்லை!



**தூயவன்**
நோர்வே

---

குண்டுமழை தேசத்தில், கொட்டியே தீர்த்தது.
தலையில்லா முண்டமாய், பலவுடல் வீழ்ந்தது.
காற்றிலே பிணவாடை, தேசமெங்கும் பரவியது.
மக்களின் அழுகுரல், உலகையே உலுப்பியது .

அங்கங்கள் சிதைந்து, பலவுயிர் மடிந்தது.
இறந்திட்ட ஆன்மாக்கள், ஊரெல்லாம் அலைந்தது.
உலகமும் மௌனமாய்க், கைகட்டிப் பார்த்தது.
நடந்திட்ட படுகொலையைத், தடுக்காமல் இருந்தது .

போராடி வேங்கைகளும், மௌனமாய் அடங்கியது.
முள்ளி வாய்க்காலும்,குருதியில் குளித்தது.
நந்திக் கடலிலும், பிணங்கள் மிதந்தது.
வல்லூறுகள் தேசத்தைத், துரோகத்தால் வீழ்த்தியது.



**சுதேன் சுதேகி**

முள்ளி வாய்க்கால் சரீர மொன்றின்
முனகல் சத்தம் கேட்ட தங்கே
புள்ளி மானாய் இருந்த புலி
புழுதி மண்ணில் தான் கிடந்தாள்
குள்ள நரிக் கூட்டம் வந்து
குதறி யாங்கே பெண் உடலில்
கிள்ளிக் கிள்ளி எடுத்த விடம்
கொள்ளிக் கண்க ளாய்த் தெரியும்
துள்ளித் துள்ளித் துவம்சம் செய்தோள்
துடிப் படங்கிப் போகும் வேளை
வெள்ளை யம்மாள் இவள் தனக்காய்
விண் உலகம் காத்து நிற்கும்!

சோதி செல்லத்துரை
டென்மார்க்



இனவெறி பிடித்த அசுர கழுகுகளின்!!
கொடிய பசிதீர்த்த மனித குருதிகளின்!!
சிதைந்த சிறிய அரும்பு மலர்களின்!!
நினைவுகள் மறக்குமோ எங்கள் நெஞ்சங்களின்!!

துப்பாக்கித் தோட்டாக்கள் சிரங்களைச் சிதைக்க!!
வெடிகுண்டு மழைகள் தமிழ்தேசத்தைத் தீப்பிழம்பாக்க!!
இனத்தைக்காக்க உயிரைத்துச்சமாய் நினைத்துப் போராட!!
இழந்தஉறவுகளோ, வார்த்தையில்லை வேதனையைச் சொல்ல!!

அந்நியமொழி படைத்துறை
எம்பெண்களின் கற்பைச்சிதைக்க!!
என்தாய்குலத்தின் தனத்தையறுத்து குருதியைப் பருக!!
தடுக்க நினைத்து போராட்டம் வலுப்பெற!!
குருதி ஆறாய் ஆனதே எம்தேசம்!!



சு. கமழினி.

இனவாத அரசின் கொலை செயலினால்
பிணமானது தமிழ் மக்களின் குவியல்
முள்ளி வாய்க்காலில் மனித உயிர்கள்
முனகல் அடங்கிப் போயிற்று
தமிழனின் குருதி மண்ணை நனைத்து
ஈழ பூமியில் ஓடி உறைந்தது
ரசாயன குண்டுகளில் கொத்துக் கொத்தாக
மடிந்த உயிர்கள் கொடுமை
கூட்டணி சேர்ந்த கயவர் கூட்டமும்
காட்டிக் கொடுத்த துரோகி சிலராலும்
இளந்தளிர் முதல் முதியோர் வரை
எங்கும் பிணமாய்ச் சிதறினரே

வா.சண்முகம்
கும்பகோணம்.



முள்ளி வாய்க்கால் முழுதும் பிணமே..
கொள்ளி வைக்க இல்லை சனமே..
கொன்று குவித்தது சிங்கள சினமே..
செத்து வீழ்ந்தது செம்மொழி இனமே..
வேடிக்கை பார்த்தது உலகம் தினமே..
அநீதியின் பக்கம் ஆண்டவன் மனமே..
எங்களை ஆக்கியது குண்டுகள் ரணமே
அதற்குத் துணை நயவஞ்சகர் பணமே..
நாங்களும் ஆனோம் வறண்ட வனமே..
வீழ்ந்தாலும் எழுவான் தமிழன் அக்கணமே..
அதுவே எங்கள் பரம்பரை குணமே..
மீட்போம் எங்கள் ஈழத்தின் தனமே..

கவிரதன்
மதுரை



முள்ளிவாய்க்கால் மறக்க முடியா வலி
சரீரம் அங்கே புதையுண்ட பூமி,
சன்னங்கள் பாய்ந்த உடல்கள் பல
சரிந்து விழுந்து புதைந்த பூமி,
உயிரைப் பாதுகாக்க தோண்டியக் குழியில்
உயிருடன் புதையுண்ட ஆன்மாக்கள் பல,
உதவியை எதிர் பார்த்து, பார்த்து
பசியுடன் ஏங்கித் தவித்த நாம்
உணவின்றி மாண்ட பூமி தம்பி,
எவர் அறிவார் நம் வலி
உயிர். உடமை மட்டுமா இழந்தோம்
ஒரு பொன் விளை நாட்டை.



ஐ.பிரபு
யாழ்ப்பாணம்

---

முற்றும் துறந்து விட்டோம்முள்ளி வாய்க்காலில்
வரலாறு மறவாது முள்ளிவாய்க்கால் படுகொலை !
வீரியமாய் வாழ்ந்த வாழ்வு வீறுகொண்டு வந்த சிங்கள
நாய்களின் கொடூர நகங்களைப் பதிந்த மர்மம் நரக வேதனை
சொந்த மண்ணில் சிங்கமாய் வாழ்ந்த எம்மை
சிங்கள கொடூரம் வன்மையாய் வஞ்சித்த நிகழ்வு
மருண்ட விழிகளாய் இருந்த பிஞ்சுகளை
மிரண்ட விழிகளாய் மாற்றிய கொடுமை
மார்பகப் பாலுக்காய் வேண்டி மழலைச் செல்வங்கள்
மயங்கி சரிந்து தாய்மையைக் கொன்ற கொடுமை
சொர்க்கபூமியாய் இருந்த பூமி
குருதி ஆறாய் நேர்ந்த கொடுமை
தமிழ்மண் உள்ளவரை செங்குருதி பாய்ந்த
முள்ளி வாய்க்காலை நிச்சயமாய் மறக்காது !!



கி. சீனிவாசன்
மீஞ்சூர், சென்னை

வரலாற்றுப் பதிவில் வடுவாய் பதிந்து
போனது முள்ளிவாய்க்கால் படுகொலை..!
கொத்துக்கொத்தாய்அள்ளிக்கொடுத்தோம்
கொள்ளிபோடவும் கொடும்பகை விட்டதில்லை..!
நந்திக்கடலோரம் நடாத்திய மனிதவேட்டை
நாதியற்றுக்கிடந்த நாற்றமடித்த பிணங்கள் மேல்
துள்ளிவிளையாடினான் சிங்களன்..!
அள்ளிக் கூட்டி ஆழ்குழியில் அடக்கமாக்கினோம்
முள்ளி வாய்க்கால் மண்ணடியில் முடக்கலாகினோம்..!
இறந்தவர்க்கு ஈமக் கடன் செய்ய
அன்று இடமும் இல்லை நேரமும் இல்லை
அவரவர் உயிர்காக்க பிணத்தின் மேல்
ஏறிமிதித்து ஓடினர் எம் மக்கள் அன்று...
தங்கள் உயிர் எப்போ பறிபோகும் என்ற பதைபதைப்புடன்...
பிணங்கடந்து வந்த நாங்கள் நடை பிணமாக வாழ்கின்றோம்...
எப்படி முடியும் அந்த வலிகளை மறந்து விட...
காயங்களோ ஆறவில்லை மருந்துகளும் அவைக்கு இல்லை...!



அனித்தா தறு
இலங்கை

சிங்களவர்களின் இனவெறித் தாக்குதல்களால் சின்னா பின்னமானதே
சிங்காரமான முள்ளிவாய்கால் சித்திரங்கலைந்த ஓவியமானதே
தொடர்ந்த குண்டு மழையில் நனைந்தே விடுபட முடியாமல்
வீதியெங்கும் தெருவெங்கும்செந்நீர் வழிந்தோடியதே
குற்றுயிருமாய் கொலையுயிருமாய் கத்திக் கதறிய ஓலங்கள்
வானைப் பிளந்ததே அங்ககீன உடல்கள் அலறித்துடித்தனவே
துடி துடித்த உடல்களை ஈவிரக்கமின்றிக்
கண் கொண்டு பார்க்க முடியாமல்
மண்கொண்டு மூடி மண்மேடாக்கினரே
சிங்கள நாய்கள் நந்திக் கடலில்
தோணியாக உடல்கள் மிதந்தனவே
முள்ளிவாய்க்கால் சரீரத்தில் குத்திய முட்கள் ஆறாப் புண்களாய்
இன்று நினைத்தாலும் வலிக்கிறதே



ரேணுகா பாலு

சிதைக்கவும் விதைத்து, விளைவினில் பதைத்து;
சிதைந்ததால் சிக்கிய உறவுகள் நசித்து;
சிதைந்த முள்ளி வாய்க்கால் சிதைப்பாக
சிதைத்திட்டே கதைத்திட்டாயே, பாசங்களதும் துஞ்சிடாதே!

துஞ்சுவதுநீ மஞ்சத்தில் என்றாலும் இன்றைக்கே;
துஞ்சிடாது அஞ்சிடாது, வீறுநடை போட்டின்றே;
துஞ்சிடாது எஞ்சியுள்ள, உயிருணர்வு சிந்திடாதே;
துஞ்சியது போதுமென்றே, ஓங்கிடுதே வெல்லுவோமெனவே!

வெல்லுவோமெனச் சொல்லுவது, கொல்லுதற்கு என்பதில்லையே;
வெல்லுவதை எள்ளுவதைத், தள்ளுவதாய்த் தவிர்த்திங்கே;
வெல்லுவோம் உணர்வுகளை, உறவுகளை இணைத்திட்டே;
வெல்லாது நில்லோமே, கொல்லாதுன் கொடுமைகளையே!



மருத்துவக்கவிஞர்
பெ.தி.சுகுமார்.

---

பாசம் கொள்ளும் உறவுகளும்
பதுங்கி வாழுதே நாட்டினிலே
பிதுங்கிப் போன கண்களும்
கண்ணீர் காய்ந்து தவிக்கிறதே
திட்டுத் திட்டாய் உறவுகள்
சுட்டுப் போனது அறிவாயோ
சிட்டுக் குருவி கனவுகளையும்
தோட்டாக்கள் துளைத்தது தெரியுமோ
கொஞ்சிப் பேசிய வார்த்தைகளெல்லம்
அஞ்சி நடுங்கி நிற்கிறதே
பஞ்சு வைத்த செவிகளைக்
கொஞ்சம் திறந்து கேளுங்கள்
பிஞ்சு அழுகுரல் கேட்கலையா
நெஞ்சம் படைத்த உறவுகளே
வஞ்சம் தீர்க்கும் பாவிகளைக்
கொஞ்சம் கேட்க வழியில்லையா
தஞ்சம் என்று வந்தோரை
சிதைத்த கொடியோன் வாசலிலே.!



மன்னை மணிமாறன்

துவேசத்தினை நேர் நிறுத்தி இனத்தினை அழித்தனர்...
மதத்தினை முன்னிறுத்தி மனிதநேயத்தை ஒழித்தனர் ...
இன்னுமா போதவில்லை இடுகாடு உங்களுக்கு ...
இன்னுமொரு இனப்படுகொலை ஈழத் தமிழர்களுக்கு...

அதிகார வர்க்கத்தின் ஆணவ செயலுக்கு
சதிகார நாடுகளும் சாட்சிக்கு வந்திடவே
நெஞ்சுறுதி நேர்நிறுத்தி வீரம் காத்து
செங்குருதி சிந்திய தமிழன் வாழ்க...

மாண்டனர் தமிழரென மனப்பால் குடித்தாயோ...
மீண்டுமொரு தலைவனைத் தமிழும் ஈனும்
மற்றுமொரு கதை சொல்லக் காத்திருக்கு
மறக்காது முள்ளிவாய்க்கால் சுவடுகள்...



சத்யா மாணிக்கம்
வேலூர்.

---

தாயகத்தின் தமிழர்கள் நிம்மதியாக வாழ்ந்திட
முள்ளி வாய்க்காலில் உதிர்ந்த உறவுகள்
விடுதலையைத் தேடிய கல்லறை பூக்கள்
விடியலுக்காய் இருளில் உதித்த தீபங்கள்

சிந்தனையில்லா சிங்களவர்களால் வஞ்சிக்கப்பட்ட இனம்
உலகமே வியந்திடும் வீரத் தமிழர்கள்
மறத் தமிழச்சியின் மடி தவழ்ந்த
பிரபாகரன் அண்ணாவின் இரத்த உறவுகள்

புரிந்தோருக்குத் தமிழனாய் புரியாதோருக்கு எதிரியாய்
தாயகம் காத்திட முள்ளிவாய்க்காலின் சுவடாய்
மண்ணில் காவியமாகிக் காற்றோடு கலந்து
கல்லறை புகுந்த முள்ளிவாய்க்கால் சுவடுகள்



றிஸ்வான்
இலங்கை ஏறாவூர்

முட்டுக் கட்டை இழந்த கூட்டம்போல்
முன்னும் பின்னும் மக்கள் பயணம்
முடிவுறா இந்த வலியின் அவலம்
முடிவடையா வார்த்தையின் கண்ணீர் ஓடம்...

எத்தனை வலி நாம் சுமந்தோம்
எழுத மறுத்த புதுக் கதையது
எண்ணில்லா உடமை ஏனோ இழந்தோம்
எதுவுமின்றித் தனிமையில் நாமும் தவித்தோம்...

பொல்லாதவன் செய்த சூழ்ச்சி தானோ
பொறுமை இழந்து உணர்வு தொலைத்து
உருக்குலைந்து வேறாய் திசை மாறினோம்
என்றோ எமது வாழ்வின் விடியல்...



நிதன் நவனிதன்

---

மனிதக் குருதி குடிக்கும் அரக்கனே
மறந்து போனதோ நீயும் மனிதன் என்பது

சதை தின்று தேகம் வளர்க்கும்
சாத்தான் இன ஓநாய்க் கூட்டமே

கொத்துக் கொத்தாய் மடியும் மனித
உயிர்களின் புனிதம் நீ அறியவில்லையோ

எலும்புக்குக் குரைக்கும் எச்சில் நாய்களே
மனிதம் உனக்குள் அழிந்து போனதோ

எப்பிறவி பெற்றபோதும் மாறாது துரத்தும்
ஈனச் செயல் புரிந்த உன் பாவம்

அன்றே புரிவாய் யாரால் அழிந்தேன்
என்பது அறியாமல் அழியும் உன்வாழ்வு.



நா.பாண்டியராஜா.
இராசசிங்கமங்கலம், தமிழ்நாடு -இந்தியா.

வீரம் மறுக்கப்பட்ட வரலாறு உண்டு
புதைத்து மறைக்கப்பட்ட வரலாறு உண்டானதே!
நேருக்கு நேர் சண்டையிட்டால் ஆகாதென்று
நான்கு புறமும் தாக்கிய வீணர்களே!

காட்டிக் கொடுத்து கூட்டிய வெற்றியடா
காட்டு மிராண்டிகளிடம் கருணை எப்படி!
முள்ளிவாய்க்கால் சுவடுகள் கடைசி சேதாரம்
விடுதலைக்கு விதை போட்ட ஆதாரம்!

மீண்டு வருவோம் மீண்டும் நாட்டுக்கு
இனத்தோடு அமர்வோம் இலங்கை எங்களுக்கு
ஒன்றுக்கு நூறென்பது எங்கள் கணக்கு
என் நாடதை அடைவதே இலக்கு!



சக்திவேல்
கிருஷ்ணகிரி

---

வளமை குன்றா விடியல் வழக்கத்திற்குமாறாக
விரைந்த குண்டுகளோடு விடிந்த தினமன்று..!
தலைநிமிர்ந்த நான் தலைகுனிந்து தூங்கினால்
தூக்கு நிச்சயமென்று மரண அறிவிப்பை
மார்தட்டி ஏற்றதினம் அன்று
நான் செல்லமாக வளர்த்த குழந்தை
அவன் பள்ளமாகப் போட்ட குண்டால்
பாதியாய் தெரித்தக்கால்களை எடுத்துக்கொண்டுஇதயத்தின்
இசைக்கு நடித்த நாடியைப் பிடித்துக்கொண்டு
கனத்த இதயத்தோடு கருகிய தினமன்று..!
இது முள்ளிவாய்க்காலோடு முடிந்திடாத வீரமூச்சென்று
விழுந்தவன் இறக்கலாம்
விதைகள் இறப்பதில்லை என்றெழுவோம்..!



மு.கருணாசபா ரெத்தினம்
நாகை

நாடு முழுவதும் வேடர்கள் கொடுமையால்
சேர்ந்து சிறப்புடன் கூடின பறவைகள்
கொடிய வல்லூறு வேடன் உறவாகி
வாழ்ந்த இடங்களை வட்டமிட்டுக் காட்டியது..

அடைகாத்த பேடுகள் அலறித் துடித்தது
அம்மாவென்று குஞ்சுகள் கதறி மடிந்தது
சதியே சண்டாளாவென்று சரிந்து விழுந்தது
சரித்திரக் கொடுமையாக ஏட்டில் பதிந்தது..

உலகம் அழுதது மண்ணும் அழுதது
உதிரம் குளமானாதால் விண்ணும் வீறிட்டது
கதிரவன்கூட கலங்கி உதிக்க மறுத்தது
கரடி ஓநாய்கள் பசியாறிச் சிரித்தது..



மீரான் இப்றாஹிம்

---

துப்பாக்கிக் குண்டுகள் துளைக்காத சுவர்களா
துயிலினை மறந்து துடித்திடும் அவலம்
எறிகணை தாக்கியே எரிந்திடும் உடல்கள்
அழுகிய சடலத்தில் பாலருந்தும் சிசுக்கள்
ஆங்காங்கே அவயங்கள் உயிரில்லா உரிமங்கள்
எரியும் பனைகள் எத்தனை மனைகள்
திரும்பிய பக்கமும் திகிலாய் அலறல்
திட்டும் வார்த்தையில் முதியவர் குமுறல்
பசியில் துடித்திடும் குழந்தைகள் கதறல்
பயத்தில் நடுங்கியே எடுத்திடும் உதறல்
தமிழன் வாழ்வது இயற்கையின் குறையா
தனித்துவம் கேட்பது எங்களின் பிழையா

ஆஸாத் கமால்
இலங்கை.



(நிலைமண்டில ஆசிரியப்பா)

முள்ளி வாய்க்கால் சுவடுகள் முழுதும்
உள்ளே நெருப்பாய் உணர்வுடன் இருக்கும்!
விடுதலை வேள்வியின் வீரத் தழும்பது!
விடுகதை போலொரு விடையும் குறிப்பது!
உலகச் சண்டியர் ஓரணி நின்று
கலக்கம் கொண்டே காவு எடுத்தது!
அகமும் புறமும் ஆக்கிய தமிழன்
முகத்தைக் காட்டிய மறத்தில் முகிழ்த்தது!
முற்றிய தோல்வி முடிவே அல்ல!
பற்றிய வெற்றிகள் பாடமாய் உள்ளன!
உரம்பெறும் உலகில் ஊக்கம் கண்டு
வரலா றெழுத வாராய் நெஞ்சே!



சோமு. சக்தி
சென்னை

---

நீரோடும் வாய்க்கால்களைப் பார்த்துப் பழகிய
மக்களுக்கு மறந்து விட்டதோ
இரத்தம் ஆறாய் பெருக்கெடுத்த கொழுந்துவிட்டு
எரிந்த எங்கள் முள்ளிவாய்க்கால் நினைவுகள் ..,

சிந்தியது ஈழத் தமிழ் இரத்தமல்லவா
மறத் தமிழர்கள் மறந்துதான் போனரோ ...
பால்குடிக்கும் எங்கள் பாலகர்களுக்குப் பரிசளிக்க
வஞ்சனையால் தோற்ற சரித்திரம் மட்டுமே
தூங்கும்வேளைதனில் வானத்தில் பறந்தும் நீர்மூழ்கிக் கப்பலில்
முங்கியும் வீரமுரசு கொட்டியது உன்இனமென்று
சொல்லிக் கொடுக்க மிச்சம் வைத்திருங்கள்
முள்ளிவாய்க்கால் சுவடுகளைக் கடந்தும் காலம் மாறும்
காட்சிகள்மாறும்
சாட்சியாய் நிற்கும் என்இனம் ஆட்சிசெய்யும்
காலம் வரும்வரை காத்திருப்போம் நம்பிக்கையுடன் ...

தபால்காரன் மணிகண்டன்

ஆர்ப்பரிக்கும் முல்லைக்கடல் அன்று அமைதியானதேனோ
தமிழன் இரத்தவாடையில் இயக்கம் தொலைத்ததாலோ
சுற்றுச் சூழலை மனிதவுடல்கள் அலங்கரிக்க
சோககீதம் பாடியதோ அந்தத் தென்றலும்

விடியல் காணாமலே விதையாகிய உயிர்கள்
விழிநீரை உரமாய் வாங்கிப் போனதோ
இனியும் வேண்டாம் அந்தக் கோரம்
இறைவா நீயுமேன் கொண்டாய் மௌனம்

அவலக்குரல்கள் அடங்கிப் போக
அங்கே மனித எச்சங்கள் காட்சிகளாக
அமைதி கொண்டது முள்ளிவாய்க்கால் பூமி
அடையாளம் தொலைத்தது தாயகம் அன்று..



தனா சர்மா
ஈழம்.

---

முள்ளிவாய்க்காலில் மூடர்களின் கொடும் சதியோ
சோகத்தைச் சொன்னால்சொல்லில் அடங்காது
கண்ணி வெடிக்குத் தப்பித்த மண்ணில்
பெண்ணினத்தைக் குறிவைத்து
பெருந்தீவினை செயல்களோ,
துள்ளி விளையாடிய பள்ளி பிள்ளைகளைக்
கிள்ளி எறியப்பட்டும் கீழ்த்தரமான பலாத்காரமும்
பருவப் பெண்களின்  உருவம் எரிப்பும்
அருவருக்கும் ஆபாசமாய் பெண்களின் கற்பழிப்பும்,
பிஞ்சு குழந்தைகளை பெற்றோர்முன் கழுத்தறுப்பும் ,
வெடிகுண்டு வீசிய இராணுவ தாக்குதலும்
வெட்டவெளியில் அறிவாளால் வெட்டி துண்டாடியதும்
வேடிக்கை பார்த்த இலங்கையின் வெறியாட்டமன்றோ !!!.



கவிஞர். பட்டிக்குடிக்காடு

இரா.கோவிந்தராசு.

வான்மழையாய் குண்டுமழை உடலைத் துளைக்க
குருதிவோடிட குவியலாக பிணங்கள் கிடக்க
பெண்ணினமே கயவர்களின் பிடியில் சிக்கித்தவிக்க
சிறார்களும் கொல்லப்பட்டு சருகுகளாக கிடக்க
சிங்களனால் ஈழத்தில் நடந்ததே இனப்படுகொலையாய்
எள்ளளவும் ஈவு இரக்கமற்றக் கொடூரக்கொலையாம்
மின்னலாய் வெட்டுகின்ற முள்ளிவாய்க்கால் படுகொலை
உறவுகளை இழந்தாலும் ஆங்காங்கே அகதிகளானாலும்
விடுதலை வேட்கையது ஓயாமல் அலைபாய்ந்திருக்க
தமிழீழம் தமிழனுக்குச் சொந்தமாகும் நாளையெண்ணியே
ஒவ்வொரு நாளையும் உறங்காமல் கடக்கின்றோம்
நிச்சயம் சிங்களனிடமிருந்து தாயகத்தை மீட்டெடுப்போம்...!

அமுதகவி எகே

விதைக்கப் பட்ட எம் உறவுகளின்
ஞாபக அலைகள்
இன்று கண்ணீரில் வாட்டுதையா
இரத்தக் கண்ணீர் சிந்துகின்றோம்
சின்ன பாலகர்கள் மட்டுமல்ல
வீரம் கொண்ட எம் உறவுகளும்
விதைக்கப்பட்ட பூமியிலே
என் கால்கள் நடை போடையிலே
எம் உறவுகளின் குரல்கள்
எம்மை அழைக்குதையா

இழந்தோம் உறவுகளை
இன்று சிந்துகின்றோம்
கண்ணீர் மழைகளையே

ஏங்குகின்றோம் உறவுகளாய்
வந்திடுங்கள் உறவுகளே
விதைக்கப்பட்ட நிலத்தினிலே
வீர கொண்ட உறவாக



பாரதி மைந்தன்

ஈழ மண்ணிலே நடந்த போரடா
வீழ்ந்து போனது எம்மினம் தானடா
வாளை ஏந்தியக் கைகளைப் பாரடா
வாழ்ந்து காட்டிய மறவரைப் போற்றடா

நதியோடு கலந்தது தமிழினக் குருதி
வலியோடு மறைந்தது செந்நிறப் பரிதி
கதியின்றிக் கலங்கியது மக்களின் கூட்டம்
சதியோடு முடிந்தது சரித்திரப் போராட்டம்

ஊழித் தாண்டவம் ஆடிய இடமடா
ஆணவப் பேய்கள் கூடிய நிலமடா
முள்ளாய்க் குத்தும் சோக நினைவடா
முள்ளிவாய்க்காலில் புதையுண்டன வீர விதைகளடா.



கி.இலட்சுமி,
சென்னை.

---

கொத்துக் குண்டுகள் மழையாய்ப் பொழிய
ரத்தச் சகதியில் தேசம் நனைய
ஆடை கிழிந்து அலங்கோலமாய்
மூச்சிழந்து போனதடா முள்ளிவாய்க்கால் முற்றமும்

முலாம்பூச நினைக்கிறான் முள்ளிவாய்க்கால் சுவடுகளுக்கு
இடிந்த வீதிகளைப் புதுப்பிக்கலாம் சிங்களமே
இழந்துவிட்ட அங்கங்களை உருவாக்க முடியாதடா
தொலைத்துவிட்ட உறவுகளை உயிர்ப்பிக்க முடியாதடா

அம்மா என்னைக் காப்பத்துங்கோ
அப்பா என்னை தனிய விட்டுப் போய்டியே
என்னை விட்டிடுங்கோ ஒண்ணும் பண்ணாதைங்கோ!
என்றேயன்று  காற்றைக் கிழித்த கதறல்கள்..!
இன்னும் காதுகளில் ரணமாய்க் கொதிக்குதடா.!



எஸ். றதன் கார்த்திகா
சுவிஸ் சூரிச்.

உறவுகளின் மூச்சுகள் மூழ்கித்தான் போனதே
முள்ளிவாய்க்கால் பெயரே அதற்குச் சான்றானதே.!
உரிமைக்காக யுத்தம் புரிந்த மறவர்களின்
மனச் சத்தங்கள் மூச்சடங்கி விடாது.!

காற்றோடு கலந்த கந்தகத் துகள்களே
மாண்டவர்களின் துயருக்குச் சாட்சிகளும் நீங்களே.!
முள்ளிவாய்க்கால் முட்களிலே படிந்த இரத்தமும்
முனங்கியே கண்ணீர் இராகம் பாடிடுதே.!

கருகிய மரங்களே நினைவுகளில் தளிர்க்குதே
உருகிய உடலங்களில் உள்ளங்களும் உருகுதே.!
முடியிழந்த பனைகளும் பிதற்றிடத் துடிக்குதே
விடியலின் முடிவிலே துளிர்த்திட முனைந்திடுதே.!




## றோய் குருஸ் அம்புறோஸ்,
பேசாலை, மன்னார்,
இலங்கை.


---

இரக்கம் அதுவின்றி இன்னுயிரைக் கொன்றார்..!
அரக்கர் குலத்தோரும் ஆடிநிதம் நின்றார்..!
கருவைச் சிதைத்தாரே கண்முன்னே பிஞ்சில்..!
செருக்கில் மிதித்தாரே சேயவரின் நெஞ்சில்..!
உதிரம் குடித்தேதான் ஓய்ந்தநரி யாவும்..!
செதிலாய்ச் சிதைந்திங்கே சீக்கிரமாய்ச் சாகும்..!
கருணை யதுவின்றிக் காட்டேரி யாகித்
தெருவில் விலங்காகித் தேகவெறி தீர்த்தீர்..!
குருதிக் கடலாகிக் குமுறியதன் ஓலம்..!
திரும்பிப் பாராதோ திருந்தாத ஞாலம்..!
அகதி யெனவாகி அலைந்ததெம் ஈழம்..!
அகத்தில் வடுவாகும் அழிக்காது காலம்..!




## ஆனந்த் உமேஷ்
பெங்களூர்

முள்ளிவாய்க்கால் முற்றத்து மல்லிகைக் கன்றொன்று
கொத்தாகப் பூக்களோடு குதூகலித்து நின்றதம்மா
அதன்மீது தடம்பதித்த கொத்துக் குண்டுகளால்
பரிதவித்து மண்மேல் பரிதாபமாய் வீழ்ந்ததம்மா.....!

செஞ்சோலைச் சிறுவரெல்லாம் செந்நீரில் மூழ்கினரே
மாஞ்சோலைக் கிளிக்கூட்டம் மயங்கியே வீழ்ந்தனவே!
விண்முட்ட விடங்கொண்ட வாயுக்கள் படர்ந்ததனால்
நம் ஈழத்தமிழர் பிணக்காடாய்க் கிடந்தனரே!

கண்ணகிகள் கற்பதுவும் காமுகர் கரங்களிலே!
அன்று என்னக்கா இசைப்பிரியா என்னவானாள்????
உலகத்தமிழர் கண்ணீர் குருதியாய் வடிந்ததம்மா!
மண்டியிடா வீரமது மாண்டுதான் போனதம்மா....!



பிரியா கணபதிப்பிள்ளை
இலண்டன்;, ஐக்கிய இராச்சியம்.

---

கொதிக்கும் இரத்தம் அமைதி காக்குது
நயவஞ்சகப் பேய்களை அழிக்கத் துடிக்குது
மனித நேயத்தை நசுக்கிய கூட்டம்
இலங்கை மண்ணில் வாழ்ந்தது போதும்
அரக்கர் குலத்து நாய்களே
அடங்க மாட்டான் தமிழன் என்றும்
துடித்து எழுவான் உன் கதை முடிக்க
நீ செய்த பாவம் உன் இனம் அழியும்
மனிதனாய் வாழும் தகுதியற்றவர் நீங்கள்
தமிழன் உதிரம் சரித்திரம் கொண்டது
உன் உதிரம் குடிக்கும் வல்லமை கொண்டது
பிறந்திடும் விரைவில் தமிழ் ஈழம் உலகில்



கரு. கிருஷ்ணமூர்த்தி

வானம் கருத்ததோ வெண்முகில்தான் மாண்டதோ?
தானம் தவம் இரண்டும் தங்கிய வியனுலகில்...
ஈன புத்தி மாந்தரின் இழிசெயலால் மாண்டனரே!
ஈழத்தின் தமிழ்ச் சுடர்கள் வீரமிகுபோர்க்களத்தில்!

முள்ளிவாய்க்கால் நிலமெங்கும் குருதி வெள்ளம்...
அள்ளியிட்டு முத்தமிட உறவின்றி மாண்டனரே !
கொள்ளியிட்டு எரித்திடவேண்டும் அராஜகத்தை!
கள்ளிச் செடிகளை சாய்த்திடல் எப்போது?

பச்சிளம் குழந்தைமுதல் வயோதிகர் பலரும்
பதறியே உயிர்துறந்தார் தமிழீழம் வெல்கவென!
முள்ளிவாய்க்கால் மண்மீது தமிழனின் சுவடுகளை...
வெள்ளிமுளைக்கும் அடிவானம் செங்குருதிக் கவிபாடும்!



கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

---

உதிரம் உறைந்த ஊரது - எங்கள்
உறவுகள் மடிந்த நச்சு பூமியது.
நந்திக் கடலும் சிவந்தே போனதடா,
அந்த நரிகள் நடத்திய நாடகத்தில்.

கொத்துக்கொத்தாய் எம் உறவுகள் மடிந்தனவே;
கொத்துக் குண்டிலும் உடல்கள் சிதைந்தனவே.
எட்டியும் பாக்கலையே எவரும் காக்கலையே,
ஏதிலியாய் செத்து மடிந்தது எத்தனைபேர்?

கார்முகிலும் காய்ந்து போனதடா - எமக்காய்
அழுதவர்க்குக் கண்ணீரும் வற்றிப் போனதடா.
அங்கு மீண்டவரும் இல்லையடா - இன்று
மண்ணுக்குள் அவர் மண்டையோடுகளும் இல்லையடா.



கிறுக்கி
கொடுக்குளாய், மருதங்கேணி
யாழ்ப்பாணம்

முல்லை மண்ணின் மூத்த வீரர்கள்
அல்லல் பட்டே அணைந்த நாட்கள்
எல்லோர் மனதிலும் எரிமலையாய் இன்றும்
சொல்ல முடியாத சோகத்தைத் தருகிறதே

இல்லம் மெல்லாம் இடித்தே அழித்திட
மெல்ல மக்கள் மறைந்தே வாழ்ந்திட
கொல்லும் இராணுவம் கூக்குரல் போட்டு
எல்லா பக்கமும் எல்லை போட்டனர்

மண்ணில் துடித்து மாண்ட மக்கள்
பெண்கள் பட்ட பெருந்துயர் எல்லாம்
கண்களில் இன்றும் கனலாய்த் தெரிகிறதே
எண்ணற்ற உடல்கள் எரிந்த நாளன்றோ



நிர்மலா சிவராசசிங்கம்

குண்டு விழுந்த குழிகள், குடியிழந்த
பெண்கள், கழுத்தறுந்த பிள்ளைகள், – கண்ணீர்
நிறைந்த குளங்கள், நினைவிழந்த பெற்றோர்
உறைந்து கிடக்கும்பாழ் ஊர்.

கொன்றழித்தப் பாவிகள், கூடநின்றே வஞ்சித்த
நன்றிகெட்ட உள்ளங்கள், நாடறிய – வென்றதாகக்
கூறும் விரோதிகளின் கூடாரம் என்றின்றும்
நாறும் துரோக நதி.

கற்பிழந்த மாதர், கலையிழந்த இல்வாழ்க்கை,
நற்பண்பை நீங்கி நடமாடும் – குற்றமுள
மாந்தர் குடியிருக்கும் மண்ணாய்த் தடம்பதித்து
சாந்தமற்ற தானதுவே சான்று.



மெய்யன் நடராஜ்
வத்தளை இலங்கை

தமிழ் மணம் கமிழும் தமிழீழ தேசமதில்
நறுமுகைகளின் வாசத்தில் தமிழ் மணக்கும்
நங்கைகளின் வீரத்தில் வேங்கைகளும் வாழும்
துரோகத்தின் சாபத்தால் நேர்ந்ததே கொடூரம்

நச்சுவாயுக்கள் காற்றில் கலந்து மூச்சை நிறுத்த
குண்டுகளின் துகள்கள் அவயங்களைக் கிழிக்க
எஞ்சிய தேகத்தின் ஆடையை விலக்கி புணர்ந்தது
தர்மம் போதிக்கும் பௌத்த தேசம்

பசிக்குத் தாய் ஏங்க பாலுக்கு சேய் அழ
தாகம் தீர்க்க தந்தை போராட
சோகம் நெஞ்சைப் பிளந்து உதிரம் கொட்ட
ஆறாத மரணவலியே முள்ளிவாய்க்கால் சுவடுகள்



ஞா. ரேணுகாசன்
சம்பூர் - 07 மூதூர்
திருகோணமலை, ஈழம்

இனவெறி கொண்டு உள்ளத்தின் ஈரம்
மறைந்து போனதடா மனிதா உனக்கு
அழுகுரலும் புலம்பலும் ஆனந்தமாய் மாறியதோ
பிஞ்சுக் குழந்தைகளும் உன் பார்வையில்
நஞ்சாய் தெரிந்தது ஏனோ மனிதா

குண்டுகள் துளைத்து குவலயம் நடுங்க
பாதகம் செய்து பிணக்குவியல்களை
சேர்த்து மாபாதகம் செய்தாய் இம்மண்ணில்
உயிர்போகும்போது எடுத்து செல்வாயா?

உலகம் முழுவதும் ஒரே இனமடா
மனிதன் மனிதம் அன்புமட்டுமே ஆள மனிதம் தொலைக்காதே,



ஷீலா டுடி
கோவை

கொஞ்சும் தமிழ்பேசி மிஞ்சும் புன்னகையுடன்
பூஞ்செடிகளுக்கு நடுவே பூபாதங்கள் வலிக்காணா
களிகாணுகையில் துப்பாக்கி முன்தோன்றிக் குருதி
சிந்தவோடவிட ஆதரவின்றி ஆறுதலுக்காக ஓட்டம்
பள்ளிச்செல்ல துடித்தப்போது பதுங்குகுழி புத்தகப்பை
மாலையிட்ட கன்னியரும் மாலையிடும் மங்கையரும்
மானங்காக்க வோடிஒளிய பாலகனுக்கும் குண்டுபரிசு
உண்ண உணவுமில்லை உடுத்த உடையுமில்லை
நடுநிசியிலும் அகன்ற பார்வையுடன் கழிந்தகாலம்
பிறந்த குழந்தையும் பிறக்கும் மழலையும்
வேரறுபட்டு வீதியில் விதியால் நம்பிக்கையாய்
எவருமின்றி முள்ளிவாய்க்காலென்றதும் எந்திரையில் ஓடிமறைந்தது


பக.அறிவுச்செல்வன்
விராலிமலை
புதுக்கோட்டை




---

பொத்துக் கொண்டு வானமது பொழிவது போல்
கொத்துக் குண்டுகளைப் பொழிந்த இடம்!
பித்துக் கொண்ட சிங்களன் கொலை வெறி
கொண்டு கோரதாண்டவமாடிய இடம்!

வீரம் வீழ்த்தப் படவில்லை யங்கே - மாறாக
விதைக்கப் பட்ட நிலம் - தமிழ்த்
தீரர்தம் செந்நீரும் கண்ணீரும் பாய்ந்த நிலம்!
வீரம் மிக்கவிதைகள் ஆழப்புதைந்த நிலம்!

முள்ளினை முள்ளால் எடுப்பதுபோல் வஞ்சகத்தை
வேரறுப்போம் வஞ்சம் தீர்ப்போம்!
முள்ளாய் உறுத்திக் கொண்டிருக்கும் அதுவரை
முள்ளி வாய்க்கால் சுவடுகள் நெஞ்சிலே!




செல்லமுத்து பெரியசாமி,
அரிக்காரன் வலசு, திருப்பூர் மாவட்டம்,
தமிழ் நாடு

குருதி வழிந்த தடம் இன்றும்
அழியாமல் கண்களைக் குளமாக்கி நிற்கிறதே...
இந்தப்பருதியில் இனிமேலும் இதுபோல் இனவழிப்பு
நிகழக்கூடதென்று எந்தன் எண்ணத்திலும் தோன்றுகிறதே...

அலை நனைத்த மணலெல்லாம் செம்மணலாகிப்போனது
ஈழக்காற்றெங்கும் அழுகுரல் ஓயாமல் கேட்க்கிறது!
முள்பட்ட சேலையாய் இதயம் துடிக்கிறது!
துட்டனவனைப் பார்க்கையிலே கரங்களும் புடைக்கிறது!

முள்ளிவாய்க்காலோடு முற்றுப்பெற்றானா? ஈழத்தமிழன் இல்லை
பதுங்கிய புலியாய் பாய்ந்துவர பார்த்திருக்கிறானா?
நெஞ்சுரம் பரம்பரையாய் ஊறிக்கிடக்கிறதே என்றும்
வஞ்சம் கொண்டே எதிரிமார்பைக் கிழிக்கப்பாத்திருக்கிறானே.



தமிழன் தயா
மட்டக்களப்பு
இலங்கை.

முள்ளிவாய்க்கால் என்ற பெயருக்காகவோ என்னவோ
நீரோடுவதற்குப் பதிலாக இரத்த ஆறு
குழந்தைகள் முதல் முதியோர் வரை
மக்களை நோக்கி தாக்கிய வண்ணம்
குண்டு மழை வானூர்தி மூலம்
வெடிகள் வாணங்கள் போல் தாக்கின
வீதி எங்கும் உயிரற்ற சடலங்கள்
பிணம் தின்னும் கழுகுகள் வட்டமிட
அந்நிய நாட்டவன் அங்கு வந்தான்
வன்முறையைப் புகுத்தினான்
வீட்டைக் கொளுத்தினான்
நம்வருங்கால சந்ததியினை
ஆதிக்கம் கொண்டு
அழித்து பொசுக்கிவிட்டார்கள்
அன்னியர் கூட்டத்தோடு



செல்வராணி கனகரத்தினம்

முள்ளிவாய்க்காலில் கிள்ளி உயிர்கள் எறியப்பட
தள்ளி நின்று வேடிக்கை பார்த்த கூட்டம்
எள்ளி நகையாடியது வேற்று நாடுகள்

இரத்த ஆறுகள் பூமியெங்கும் ஓட
பூமித்தாயும் சுமை தாங்காமல் தத்தளிக்க
உறவுகளைப் பிரிந்தும் உணர்வுகளை இழந்தும்

பிஞ்சு முதல் கனி வரை
அத்தனையும் அத்திவாரமின்றி அழிந்து போனது
கடற்கரை எங்கும் இரத்தக் கறையானது

பட்டவையெல்லாம் சூடுகளல்ல மனிதசுவடுகள்
மனித ஓலங்கள் செவிதனிலே ஓசையின்றி
ஒலித்துக் கொண்டிருக்கின்றன மௌன மொழிகளாக...




தர்ஷினி அஜந்தன்
திருகோணமலை, இலங்கை


---

இதயத்தைத் தின்றே இரக்கம் மறந்து
உதயத்தைக் கண்டும் உபத்திரவம் செய்தனர்
பதைத்திட உயிரைப் பறித்திட உதைத்து
சிதைத்திடத் தீயில் சரீரம் எறிந்தனரே

சாதியின் பெயரால் சமாதிகள் ஆக்கியே
மோதியே அழித்தனர் முழந்தாளில் வைத்து
பாதிக்கு மேற்பட்டோர் பரிதாப மரணம்
நாதிகள் இல்லை நியாயம் கேட்கவே

வெற்றுக் கையுடன் வீதியில் வந்தோம்
இற்றுச் சரிந்திட இயந்திரம் இயக்கினீர்
கற்றை கற்றையாய் கண்முன் வீழ்ந்திட
பற்றையில் வீசியே பற்றிடக் கொளுத்தினீரே




பொற்கேணி முளப்ஃபர்
எ.எல். முளப்ஃபர் கான்
பள்ளக்கமம், பொற்கேணி, இலங்கை

முள்ளி வாய்க்கால் போர் பலருக்குக்
கொள்ளி வைக்க வைத்து விட்டது.
உறவுகளைத் தொலைத்து உணர்வுகளைப் பறித்து
உள்ளத்தால் நொந்து இரத்த வெள்ளத்தில்
தோய்ந்து துன்பத்தில் துவண்டு வாழவைத்ததே
நீர் ஓடிய ஓடை எங்கும்
செங்குருதியும் சேர்ந்து ஓட விட்டதே
உண்ண உணவின்றி உறங்க இடமின்றி
பதுங்கு குழியில் இறங்க வைத்ததே
சொத்து இழந்து சுகம் இழந்து
பெற்ற பிள்ளைகளையும் சேர்த்து இழந்து
ஈழமண் போரின்  வடுவாய்ப் போனதே.!


இ. சாந்தகலா மலேசியா
( இலங்கை )




வடக்கு இலங்கையின் வன்னி மண்ணில்
வடுக்கள் நிறைந்த வைகாசி பதினெட்டு/\
ஈழப் போரின் இறுதிக் கட்டம்
ஈனப் பிறவிகளின் இழிவு ஆட்டம்

உயிர் துறந்தன உறவுகள் அன்று
துயில் உரிந்தன துவேசிகள் வென்று
நைல் நதியைப்போல் இரத்த வெள்ளம்
உயிலேதுமின்றி உருகியது நித்தம் உள்ளம்

துன்பவியல் காவியமொன்று தொடங்கிவிட்டது அன்று
கன்மவினைதானென்று காலங்கள் கடந்தன இன்று
நன்மை வந்துசேருமோ நல்லாட்சி கூடுமோ
அன்புகொண்ட உள்ளங்கள்தான் அவனியில் இல்லையோ




முருகேசு கலைச்செல்வன்
மட்டக்களப்பு, இலங்கை

விண்ணின் மழைத்துளி பொழிவது போல்
குண்டுகள் மழையாய்ப் பொழிந்தனவே
எம்மின மக்கள் உயிர்களையே
பறித்து சிரித்தான் சிங்களனே

குருதிக் கடலில் குளிக்க வைத்தான்
குறுநகை புரியும் குழந்தைகள் எல்லாம்
கொன்று குவிக்க தயங்க வில்லை
சிங்களனின் களிப்பும் ஓய வில்லை

அண்டை நாடுகள் துணை செய்ய
ஐக்கிய நாடுகளும் அமைதி கொள்ள
முள்ளி வாய்க்கால் முற்றத்தில்
எம்மின மக்கள் உயிர்களையே
விடுதலை விதையாய் விதைத்தனரே...



கோ.பூமணி
செவ்வாபேட்டை

---

விடுதலை கேட்டதால் படுகொலை அநீதி
வேங்கை வேட்டையில் வஞ்சக நரிகள்!
பெண்ணையும் குத்திய கொடூரக் கத்திகள்
குருத்தென்றும் பாராது குதறிய நாய்கள்!

வடகிழக்குக் கரையை செந்நீரில் நனைத்து
நிலைத்ததே வீரனின் துடிப்பும் சதிகளால்!
தலைவனை இழந்த தமிழீழக் கப்பலை
கரையில் இழுத்து கொளுத்திய வெறிகள்!

ஆண்டுகளாய் அவர்கண்ட ஈழக் கனவை
இரத்தம் தெளித்துக் கலைத்ததொரு நாடு!
முள்ளிவாய்கால் என்ற கருப்புக் கறையே
மாறாது என்றுமுன் வேதனைச் சுவடுகள்!

திருமலை ப. சிவன்



கந்தகப் புகை காற்றை நிறைக்க
வெந்தது பல தேகம் இங்கு
தாயின் மண்ணின் மடி மேலே
தஞ்சம் கொண்டது கோடி உயிர்

நோயும் நொடியும் தடை போட
தேயும் கனவில் மனம் ஏங்க
குண்டு மழைகள் குடல் உருவ
தொண்டு செய்யவும் யாரும் இல்லை

என்பு மச்சைகள் உருகிப் போக
அன்பு மண்ணில் மக்கிப் போக
முகத்திரை கிழிக்கும்  நாள் வருகையில்
முத்திரை பதிக்க நாம் மறப்போமா..?



மன்னார் ரமா

---

அமைதியான இரவினில் ஆகாயம் தீப்பிடித்து
இமைநொடியில் புவிவாழ் உயிர்களை அழிப்பதுபோல்
அதிகாரப் பேய்வீசு அணுக்குண்டின் கனல்மழையில்
நதியோரக் கரையென்று அங்கங்கள் குவிந்தனவே...

பொழில்விரி பூவினங்கள் செம்புனல் குடித்தும்
எழில்நிறை தமிழினங்கள் குருதிக்கடல் மிதந்தும்
கருவில்வளர் சிற்றுயிரும் கற்பிழந்து துடித்தும்
அரும்புகள் வேரறுந்தும் அலைந்த நரகமதுவே...

காளிதேவி காணாத போர்க்களம் அதுவன்றோ?...
காலனவன் கேளாத உயிர்களின் ஓலமன்றே
மனிதத்தை மனுக்கொடுத்து அங்குநின்று தேடுகிறேன்
மனமெல்லாம் ரணங்களில் தோய்ந்தே வாடுகிறேன்...



**இதயம் விஜய்**, ஆம்பலாப்பட்டு.

கூற்றுவன் பெயரால் குறிக்கோளற்ற செயற்பாடுகள்
வாழ்வினைத் தின்று ஏப்பம் விட்டதுவே
வதையும் சிதைவும் வலியத் தந்ததால்
சிதைந்த சதைகளும் வெந்து அவிந்தனவே

நாடற்றுக் கூடற்று எஞ்சிய உயிரையும்
பாம்புகளாய்ப் பருந்துகளாய்ச் சுற்றி வளைக்க
அகதிகளாய் அலைந்த ஈழரின் இரத்தம்
சகதிகளாய் நாமும் வாழ்வதா நித்தம்

முள்ளிவாய்க்கால் பேரவலம் மனித நாகரிகத்தை
எள்ளிநகையாடி பரிகசிக்கும்
எண்ணுங்கள் எவராலே ஈழ நாசம்
ஏற்படவும் காரணமாம் சர்வதேசம்

நிலாக்கவி நதீரா

---

இலங்கை மண்ணில் ஈழப் பகுதியில்
இழந்த உயிர்களின் இறவாச் சுவடுகள்
இன்னார் இனியார் ஈவிரக்கம் இன்றி
இனத்தை அழித்த ஈனச் செயல்

குழந்தைகள் கூடவே குவிந்தது உடல்கள்
கூக்குரல் செவிகளில் கேட்கவும் இல்லையோ
எல்லை மீறி ஏவிய கணைகள்
எல்லாம் சேர்ந்து ஏற்றியது துளைகள்

கட்டி நீயோ காட்டிய வித்தை
வட்டியும் முதலுமாய் வந்து சேரும்
முள்ளி வாய்க்கால் மூடிய இரத்தம்
மூடவில்லை விழிகள் முன்னே தோன்ற

யாசீன் நிஹ்ரி
பெரியமடு, மன்னார்



மனம் வருந்தி கதறுது இங்கே
இனம் அழிந்த சுவடுகள் அங்கே
பிணம் தின்னும் பிறவிகள் கொடுமை
தினம் நினைத்து தொடருது மிடிமை.

அபலை மக்கள் அழுகை சத்தம்
ஆணி பாய்ந்து
காதில் நித்தம்.
விதவை பெண்ணின்
மடியில் கணவன்.
உதவி செய்ய முடியா மறவன்.

நான்கு திசை பிணங்களின் வாடை.
அடக்கம் செய்ய இல்லை பாடை
ஆதரவு செய்ய எவரும் இன்றி
அனாதை போன்று அனைவரும் நின்றார்.



கவிஞர். ஏரூர் கே. நௌஷாத்

---

ஈழ மண்ணில் செங்குருதிப் படரல்
சிம்மப் பார்வையில் ஆதித் தமிழன்
ஆடையற்று நின்றும் அடிபணிய மறுக்க
துரோகக் குண்டுகள் துளைத்தன மார்பை...

பெண்ணியக் கொலை ஆடவனுக்கு அணியன்று
ஆண்மை அற்ற சிங்களனுக்கு உண்டு
பிறப்பறியாப் பிண்டக் கூட்டத்தில் மறத்தமிழச்சி
கற்பு காக்க மார்பில் குண்டேந்தினாள்....

மறத்தமிழ் மழலை பாலுக்கு அழுதேங்க
இருதயம் துளைத்த குண்டு ஏங்கியழ
மரணம் மறத்தமிழன் முன் மண்டியிட்டது
மீண்டு வருவோம் மீண்டும் வருவோம்.!!



ம.கண்ணன்.
மதுரை.

முக்கடலைத் தலையில் கொண்ட நாட்டிலே...
அறிவியலின் ஆர்ப்பரிப்பு குடியியலின் கருத்தரிப்பு
சட்டெனெழுந்த குண்டுகள் தடம்புரண்டன வண்டுகள்
இமயத்தை மிஞ்சியது போர்க்களத்தில் மலையுடல்கள்
இதயத்தை நஞ்சியது அவ்விடத்தில் பலவுடல்கள்
கதறிட்டழும் ஓலங்கள் அந்நாட்டின் தேசியகீதங்கள்...
சிதறிய உடல்கள் அம்மண்ணில் வித்துக்களாய்
இளைய தலைமுறையருக்கு உரமேற்றும் சத்துக்களாய்...
வண்ணக் களஞ்சியத்திலொரு செங்குருதி ஆறு
என்றும் மங்கவில்லை யெந்தமிழ் வீறு...!
கரம்பிடிக்க யாருமில்லை காயமின்றி யாருமில்லை
உயிர்ப்பிடித்தது கந்தகமே !
உயிர்க்குடித்தது சிங்களமே..!



அசோக் குமரன்
சென்னை

---

சிறுபான்மை என்றதால் ஏளனமாய் எண்ணி
சில்லறையாய் சிதைத்து ருசித்து விட்டீரோ
தடம் பதிக்க வந்த தமிழீழம் என்றோ
தலையில் மிதித்து புதைத்து விட்டீரோ
பத்தினியையும் கர்ப்பிணியையும் பாலகனையும் பாமரனையும்
மனிதம் மறந்து பதம் பார்த்திட்டீர்ரே
கொத்துக் கொத்தாய் குவித்து விட்டு
அங்கங்களைச் சிதைத்து போதையில் குதித்திட்டீர்ரே
நரகத்தின் அனலை நாவிலே சுவைக்க வைத்திட்டீரே
அவலக்குரல் கேட்டும் அடக்க முனையவில்லை
எச்சம் அருந்திய மனித காட்டேறிகளே
நீங்கள் அடக்கி விட்டது மனித உடலை அல்ல
எதிர்கால ஈழத்தின் அடிச்சுவடுகளை...



அனுகவி றிப்கான்,
அட்டாளைச்சேனை - 06,
இலங்கை.

வேங்கையென சிலிர்த்தெழுந்து வீறுகொண்ட எம்மினத்தின்
வேரோடு விழுதினையும் வீழ்த்திவிட முடிவு கொண்டு
இனவாதப் போர்வையிலே இன்னல்களும் பல செய்தே
ஈழத்தின் ஒளி விளக்கை இருட்டாக்கத் துணிந்தனரே.

சூழ்ச்சிதனின் கரம்பிடித்து சூழ்ந்து நின்று குண்டுவீசி
கொப்பளித்த குருதியிலே குளித்தெழுந்த நாளதுவே.
குற்றுயிரும் குலையுயிராய்க் கொத்தனவே உடல்களது
கத்தகூட ஆவியற்று காற்றில் உயிர் கலந்ததுவே.

கந்தகத்துக் குண்டுகளால் கனவழித்துக் கொன்றனரே
சிந்திவிட்ட உதிரத்தினால் சிவந்ததுவே கருவானம்.
முள்ளாலே வேலியிட்டு மூச்சதனை நிறுத்தினீரே
வீழ்த்தியதால் வென்றதென்ன விடையளிப்பாய் சிங்களனே.



அ.க.பா.வெற்றிவேல்,
அம்மையப்பன்.

---

மனிதம் தொலைத்து மாமிசம் தின்னும்
மிலேச்சப் பேய்களின் மூர்க்கமான செயலால்
முள்ளிவாய்க்காலில் மனித உடல்கள் சிதறிக்கிடந்த
முறையற்ற கொடூரத்தால் மண்ணுலகே நரகமானது

தமிழனின் விடுதலையைத் தவிடுபொடி ஆக்கிட
துணையிருந்த கைகள் தொட்ட குருதியெல்லாம்
தாயகம் தேடிய தவிப்பை எழுதியதை
திரும்பிப் பார்த்தால் தெரியுமே வஞ்சகம்

இனவாதக் கொடுமைக்கு இரையான உடல் களின்
இறவாத ஆன்மாக்கள் அழியாத சுவடுகளாய்
உலகம் உள்ளவரை உறங்காத வேதனை
உண்மையைச் சொல்லுமே உதிரத்தின் சரித்திரத்தை!



லக்ஷ்மிபிரபா செல்வேந்திரன்

முள்ளிவாய்க்கால் என்ற பெயர் கேட்டால்...
முள் வந்து நெஞ்சில் தைக்கிறது...
முப்புரம் எரித்த சிவன் கூட...
மூடி நின்றார் கண்ணை இங்கே...
கருவில் இருந்த குழந்தை கூட...
கந்தகப் புகைக்குத் தப்பவே இல்லை...
கருகிய உயிர்கள் செய்த குற்றமென்ன...
மனிதமற்ற மனிதருக்கு மரணவலி தெரியுமா...
மரணஓலம் எமது காதைவிட்டு அகலுமா...
தமிழனாய்ப் பிறந்தது ஒரு குற்றமா...
அத்தனை வீரத் தமிழ் நெஞ்சத்திலும்...
அழியாத வடுவாக முள்ளிவாய்க்கால் என்றும்...

பிரியா



---

தீஞ்சு போன உடல்களும் அங்கே
தீராத் தாகத்தில் விடுதலை ஏக்கத்தில்
ஓஞ்சு போகாது கரமது கொண்டு
ஒருபிடி மண்ணை அள்ளிக் கிடந்தது

சிதறிக் கிடந்த உடலின் எச்சங்கள்
சிறையாகிக் கிடந்தது பனைக் கருக்கில்
பதறித் துடித்த உறவுகளின் அங்கம்
பக்கத்தில் இல்லாது பறந்து போனது

ஓயாத உணர்வுகள் உறங்காத நினைவுகள்
ஒருநாளும் சாகாது தமிழனின் ஏக்கம்
தாயாக நேசித்த ''தமிழீழத் தாயகம்''
தயங்காது சொல்லும் தாரக மந்திரம்.



அருண்சிவா
திருகோணமலை, இலங்கை.

நம்பவைத்து கழுத்தறுத்த நீசர்கள் எம்
கும்பிகளைக் கொதிக்க வைத்த வேசர்கள்
தும்பிகளெனத் திரிந்த துளிர்களை தளிர்களைத்
துள்ளத் துடிக்க கொன்றதன் சாட்சி

தாய் மண்ணில் புதைத்தால் விதையாவார்
சேய் அவரை எரித்தாலோ உரமாவார்
நாய்கள் அஞ்சினவோ அதனால் அந்தப்
பேய்கள் அமிலம் ஊற்றி அழித்தனவோ.

ஒடுக்கப்படும் விசை ஒருநாள்
தடுப்புகளை உடைக்கும் உத்வேகம் கொள்ளும்
எடுக்கப்படாத முள்ளாய் எம்மிதயங்களில்/
கடுத்துக்கொண்டிருக்கும் வலி அன்று செல்லும்.



சக்திஅருளானந்தம்
சேலம்.

---

ஈழத்தில் நடந்த ஈவிரக்கமில்லா யுத்தம்
இனக்கொலை நிகழ்த்தவே பிறந்தது பௌத்தம்
முள்வேலி முகாமில் முடங்கிய மனிதத்தை
முழந்தாளில் நிற்கவைத்து கொன்றிட்ட கொடூரத்தை
நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் கொதிக்கிறதே
கைக்குழந்தையும் கர்ப்பினியும் கைக்குண்டுகளிற்குப் பலியானதை
காலம்தான் மறக்கடிக்குமா! கண்மறைந்திட்ட உறவுகளை
நாளும் நினைத்து கண்ணீர் வடிக்கும்
சொந்தங்களின் துயர் தான் அழிந்திடுமா!
துளியளவும் மாற்றமில்லை அகிலம் அந்தமாகிடும்வரை
முள்ளி வாய்க்கால் சுவடுகளின் வடுக்களை
யாராலும் மறைத்திடவும் மறந்திடவும் முடியாது.



ஸாஹிரா பானு
அட்டாளைச்சேனை .16
இலங்கை

கடலில் ரத்தம் ஓடியது அன்று!
குண்டுகளாலும் புகைகளாலும் மடிந்தனர் மக்கள்!
எங்கும் மக்கள் அழும்  கூட்டம்!
உலகமே அதிர்ச்சியில்  இடிந்து போனதே!

மருந்தும் உணவுகள் கிடைக்காமல் போக
கொடுமையால் ஆனதே முள்ளிவாய்க்கால் இடம்!
நான்கு பக்கமும் பிணக் குவியல்கள்!
குண்டுகளால் உயிர்கள் மடிந்து விட்டதே!

,பூஞ்சோலையும் பூங்காவும் கருகிப் போனதே!
அப்பாவி மக்களின் நிலையோ பரிதாபம்!
முள்ளைவாய்க்கால் கொடுமை மறக்க முடியுமா?
நாளைய பொழுது நல்லதாக விடியட்டும்!



சுகன்யா நந்தகுமார்

---

உரிமை கோரிய உண்மையின் குரலை
உடைத்து நெறித்த உன்மத்தர் செயலை
நரியும் தோற்கும் நயவஞ்சகப் பாதகரை
நசித்துக் கொல்லும் ஒரு நாள் உலகம்!
பிள்ளைகள் ஆடவர் பெண் டிரெனக் கொத்தாய்க்
கொள்ளி வைத்த கொடூரம் கரும்புள்ளியாய்!
முள்ளிவாய்க்கால் கொடுமை மானுட அவமானம்!
எள்ளி வரலாறு எத்தர்களை வசைபாடும்!
மனிதம் அழிந்த மாபெரும் சோகம்!
மனதில் என்றும் நீங்கா சாபம்!
தணியும் என்றோ நினைத்தாய் பாவி?
கனலாய்ச் சுவடுகள் உனையும் அழிக்கும்!



மு.மணிமேகலை
ஓசூர்- 635109

ஏட்டில் எழுத இயலாக் கொடுமையாம்
ஆடிடாத நெஞ்சமும் ஆடியது -- வேட்டைநாய்
ஈனவனாம் ராசபக்சே என்னுமந்தச் சண்டாளன்
தானவிழ்த்த சூழ்ச்சி தலை.

பெண்டிரெனப் பாராது பேயதனின் கீழ்செயலை
மண்ணில் நடத்திட்ட மூர்க்கனவன் -- கண்ணைக்
கரத்தை கவினுயிரைக் கோதி அடடா
உதிரம் குடித்தான் உலகு.

எம்மினம் அம்மம்மா... எய்திய துன்பத்தை
இம்மண்ணில் கண்டதில்லை என்றுமே -- சண்டாளன்
சீச்சீ...இனவெறியன் ராஜபக்சே ஸ்ரீலங்கா
மண்புரிந்த தீக்கொடுமை ஈது.

கற்பினைச் சூரையாடி கண்டோர் கதிகலங்க
அற்பன் புரிந்தான் அநியாயம் -- எற்றைக்கும்
எம்தமிழர் அம்ம... இதயம் மறக்குமா?
வம்பன் வளர்த்த வினை.

உலகம் விழியாலே உற்றுமே நோக்க
பலலட்சம் பேரினைச் சாய்த்தான் -- நிலவுலகம்
கண்டிராத தீக்கொடுமை கோலத் தமிழினத்தை
மண்சாய்தான் மேலும் மடித்து.

விழியினைத் தோண்டி உடலினைக் கொய்தான்
இழிவாய்க் கொடுமை இழைத்தான் -- அழித்தான்
தமிழினத்தை ராஜபக்சே தீயன் அவனே
இழந்தோம் சகோதரினை இங்கு.

கவிக்கோலம் கிருஷ்ணமூர்த்தி



மனிதத்தைப் புதைத்திட்ட முள்ளி வாய்க்கால்
மாந்தரின வரலாற்றுக் கருப்புப் பக்கம்
புனிதனவன் புத்தனுக்கு இழுக்கைத் தேடி
பொய்ச்சரணம் புகலவைத்த போதி வெட்கம்
தனித்ததொரு தமிழினத்தை அழிக்கச் செய்த
தாழ்வுநிலை இழிவுகொண்ட மனிதக் கூட்டம்
கனியொத்த காரிகையர் கைப்பி டித்துக்
காடையர்கள் வன்புணர்ந்து கொன்ற தென்னே.

சுவடுகள்தாம் மாறாத வடுக்க ளாகிச்
சொல்லொணாத துயரத்தின் சாட்சி யாகி
அவலமென் அகிலத்தின் முன்னே நிற்க
அதுகுறித்த கவலையேதும் மனதி லின்றி
தவறிழைத்த தன்மையினை வெற்றி யாக்கி
தாங்கொணாத கொடுமைகளை இழைத்து நின்றார்
சவக்கிடங்காய் தமிழினத்தைச் சாய்த்து விட்டு
சவங்களையே புணர்ந்துநின்ற கொடுமை யென்னே.

முதுகில்தான் குத்தினரோ முகம்ம றைத்து
முறையிடவும் கேளாது வெடிவெ டித்தே
இதுதருணம் என்றேதான் கோழை யர்கள்
எந்தவொரு வினாவின்றிப் போர்மு டிக்க
புதுவிதமாய்ச் சரணடையும் உயிர்கள் போக்கி
பூமலரும் தாயகத்துக் கனவைச் சுட்டு
வெதும்பியழ வைத்தனரோ முள்ளி வாய்க்கால்
வேதனையின் சுவடுகள்தாம் மறக்கப் போமோ!

கவிஞர் ''இளவல்'' ஹரிஹரன்,
மதுரை.



காடுதிருத்தி நாடாக்கியவர்கள் தனியீழம் நாடியது
தன்னுரிமை வேண்டியது தவறா?
நேரடியாய் வீழ்த்த இயலா வீணர்களின்
போர்நிறுத்தமெனும்
நாடகத்தை நம்பி சற்றே அயர்ந்த நேரம்....
நினைக்கின்ற நெஞ்சமே வெந்தணலில்
வீழ்ந்த புழு துடிக்கிறாற் போல
துடித்துப் போயிற்று தமிழினமே!
சிதறிய தேகங்கள் சில்லு சில்லாக....
பறந்த தசைத் துகள்கள் பஞ்சுப்
பொதியாய் வான்முட்டிக்
கீழே விழுந்து தெறிக்க...
எலும்புக் குவியல்
கால் உறுத்துகின்ற கற்களாகி
பாலருந்த அன்னை மார்பில் ஒடுங்கிட்ட
பிஞ்சு மழலைகள் சுவைத்திடக் கூடநேரம் தராது...
முள்ளி வாய்க்கால் ரத்த ஆறு ஓடுகிற வீதியாய்
கையிழந்தும், காலிழந்தும் உற்றாரிழந்தும், உணவிழந்து,
பிணக்குவியல்கண்டு குமுறிட்ட....
சரித்திரம் திரும்பும்!
மண்மூடிப்போன எம்இன கனவுகளும் ஆசைகளும்
கற்பனைகளும் புதைகுழி  விதைகளாய் ஆர்த்தெழும்!
வேரூன்றிய விழுதுகளாய்ப் பற்றிப் பரந்து தமிழினை நாட்டி
சுடுகாட்டைச் சோலையாக்கும்
சாம்பரினை உதறி எழுகின்ற பீனிக்ஸ் போல
தன்சிறகை விரிக்கும் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க
கொதிக்கின்ற தமிழ் இனக்
குருதிகள் அந்தக் கூதற் காற்றினிலே
சற்றே குளிரட்டுமே!

**ஸ்ரீ சக்தி.**
பம்மல், சென்னை.



முள்வேலி சிறையென்னும் முள்ளி வாய்க்கால்
முள்ளாகத் தைத்துளது இன்னும் நெஞ்சுள்
வெள்ளைநிறக் கொடியேந்தி வந்த போதும்
வெறியோடு பிஞ்சென்றும் பார்த்தி டாமல்
அள்ளிவந்தே அடைப்புக்குள் அடைத்து வைத்தும்
ஆண்களுடன் பெண்களினைக் கட்டி வைத்தும்
உள்ளுக்குள் இலட்சமாகத் தமிழர் தம்மை
உருகுலையக் கொன்றழித்தான் இராச பக்சே !

பட்டினியில் குழந்தையழத் துடிக்கும் தாயின்
பால்முலையை அறுத்தெறிந்தார் காடை யர்கள்
நட்டநடுக் கூட்டத்துள் தமிழப் பெண்ணை
நாய்கள்போல் வன்புணர்ச்சி செய்து கொன்றார் !
மொட்டவிழா சிறுமியர்தாம் என்ற றிந்தும்
மொய்த்திட்டார் வெல்லத்தில் ஈக்கள் போல
கட்டவிழ்த்த வன்முறையில் சிங்க ளர்தாம்
கணக்கின்றி இளைஞரினைக் கொன்று போட்டார் !

ஆண்களில்லா குடிசைகள்தாம் முல்லைத் தீவில்
அல்லலுறும் வறுமையில்தான் குடும்ப மெல்லாம்
காண்கின்ற கிளிநொச்சி வவுனி தம்மில்
கல்வெட்டாய் உள்ளதின்னும் போரின் காட்சி !
மாண்புவரும் தமிழரெல்லாம் உரிமை யோடு
மகிழ்ச்சிபொங்க வாழ்வரென்ற உறுதி யெல்லாம்
தீண்டாமை போல்கனவில் ; நனவி லில்லை
தீய்க்கின்ற சுவடுகளோ மாற வில்லை !

பாவலர் கருமலைத் தமிழாழன்



முடிந்துவிட்ட கதையல்ல
முள்ளிவாய்க்கால் சம்பவம்
உதிரத்தால் எழுதிய
உண்மை சரித்திரம்..!

உரிமைக்குக் குரல்கொடுத்து
உயிரைவிட்டது ஓரினம்
இறக்கமற்ற ஈனர்களால்
இறந்ததோ தமிழினம்..!

முரண்பட்ட வீணர்களால்
முள்ளிவாய்க்கால் சிவந்தது
சிவந்தது முள்ளிவாய்க்கால்
சிதிலமடைந்த உறுப்புகளால்..!

உடலும் உதிரமும்
முனகலோடு ஓய்ந்தது
பிரிந்தது உயிர்தான்
உண்மைகள் அல்ல..!

வேடிக்கை பார்த்தத மிருகங்கள்
உண்மையின் உறுத்தல்களோடு...

வீழ்ந்த நாங்கள்
விதைகளாய் முளைப்போம்
தலையை எடுத்து
தமிழனைக் காப்போம்..!

நாளைய விடியல்
தமிழீழம் வெல்ல..!

சீனு செந்தில்
காட்டுமன்னார் கோயில்,



சிங்களனே....சிங்களனே...
தமிழனைப் பஞ்சென்று நினைத்தாயா?
தோல்விகள் தான் நாளை
வெற்றியின் வரலாறு என்பதை மறந்து விடாதே

ஒரு தலைமையழிந்தால்
மறு தலைமை வராதென்று
உனக்கு யார் சொல்லிக் கொடுத்தது?

உன் கொடுமைகளையும்,
உன் இன அழிப்பு எண்ணங்களையும்
எங்கள் இதயத்தில் எழுதி வைத்திருக்கிறோம்
அதனால் தான் எங்கள் குருதி இன்னும்
உயிர்ப்புடன் இயங்குகிறது

நாங்கள் பிஞ்சல்ல
பழுத்த மரம்
எங்கள் நெஞ்சுறுதி
பெரும் ஆயுதம்
எங்கள் எண்ணங்கள்
உங்கள் வெடிகளின் முனை போல்
பெருத்த நாக்கு கொண்ட தீப் பிழப்பு
எங்கள் தோட்டாக்களில்
உங்களின் பெயர்களைப்
பதிந்து வைத்திருக்கிறோம்

நாளைய விடியல் எங்கள் வசமே
அதற்காகத் தான் விளைந்த ஒவ்வொரு மரமும் எங்களுக்கான
காற்றைச் சேமிக்கக் கற்றுக் கொண்டு வருகிறது
இனி எங்களுக்கு மரணமில்லை
அது உங்களுக்கான தருணமே.

ஜவ்வாது முஸ்தபா
ஹைதராபாத்.



குருதிக் கடலினுள் வாழ்கின்ற இனமாய்
குமுறிக் கொண்டது முள்ளிவாய்க்கால் அன்று
முப்படை அமைத்து ஆண்ட எம்மினத்தை
பல படை இணைந்து  அழித்தது கோழைத்தனமாய்
குழந்தைகள் வயோதிபர் பெண்கள் என்றின்றி
கொன்று குவித்தனர் விதிகளை மீறி

தாயவள் மார்பினில் பருகிடும் பாலகன்
தாயவள் மரணத்தில்.. யாருக்கும் தெரியாது
மரணத்தைத் தழுவிய தமிழச்சி அவளை
அம்மணமாக்கி அழகு பார்த்தனர் காமுகர்
கைகளை உயர்த்தி வந்தஎம் உறவுகள்
காணாமல் போயினர் தமிழின அழிப்பில்

மனிதநேயம் பேசுகின்ற வெள்ளை மாமாக்கள்
மறந்து விட்டார்.. வெட்கக்கேடு முள்ளிவாய்க்காலை
அலறியடித்து ஓடியது ஐநாவும் அன்று
அரவணைக்க யாருண்டு தமிழனுக்குச் சொல்லு
முடித்துவைப்பான் தமிழன் பொறுத்துக்கொள்ளு!

உயிருடன் புதைத்தவுடல் உலகிற்கு சாட்சி
உண்மை நிலைகூற யாருக்கு மனச்சாட்சி
உறங்கும் உடல் எழுந்து வரும் ஒருநாள்
அன்றுதான் தமிழர்க்குத் திருநாள்
முள்ளிவாய்க்கால் மீண்டும் போர்முரசுக கொட்டும்
செந்தமிழர் கொடி கம்பீரமாய்ப் பறக்கும்!

ஜெ.ஜெயராணி



காணொளியில் கண்ட போதும் வானொலியில் கேட்ட போதும்
அந்தக் கொடூரத்தின் உச்சம் உலகத்மிழர்களையெல்லாம்
குலைநடுங்க வைத்த நாளின்று.!

குண்டுகள் துளைத்து தேகத்தில் வழிந்த
குருதியின் ஈரமின்னும் ஈழமண்ணில் காயவில்லை.!

ஆண்டாண்டு காலமும் மாண்டு போனவர்களை
நினைத்து அழுதிடஉறவுகளின் கண்களில் நீருமில்லை!

இறைவன் வரம் தந்து ஈழத்தமிழினம் அங்கே வாழவில்லை.!
இறுக்கதவம் கிடந்தும் யாரும் அங்கே மரணப்படுவதுமில்லை...!

இயற்கையின் இன்னல்களுக்குத் தாரைவார்த்து தந்திருந்தால் கூட
ஈழத்தின் இதயங்கள்! இத்தனை வேகத்தில் துடித்திருக்காது.!
ஏய்... இனவெறி பிடித்த சிங்கள மிருகமே....
இயற்கையின் நியதிகள் கூட உனை ஒருபோதும் மன்னிக்காது.!

சில கிளைகள் முறிந்து சில இலைகள் உதிர்ந்து
விழுந்து போனதற்காய்., நீ சிரித்துக் கொண்டிருக்கிறாய்?

விழுதுகள் விட்டு ஆணி வேரோடு அழுத்தம் பிடிக்கும்
ஆழ அகன்று வோரோடு வீழ்ந்துவிடுமென்று எண்ணிணாயோ?

பறவையின் எச்சத்தில் வந்து விழும் விதைகள்...
வீறு விருட்சம் கொண்டு பாறையையும் பிளக்கும் ..!
பாதாளத்திலும் முளைக்கும் - எம் தமிழீழம் என்பதை
நீ மறந்து விடாதே!!

கவிகான் - மன்சூர் கவி கான்
அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம்



குண்டுமழை கொட்டியது எங்கள் தேசத்தில்
குருதியில் நனைந்தது முள்ளிவாய்க்கால்
எங்கும் மரண ஓலங்கள் கரும்புகைகள்
ஏக்கத்தோடு மக்களின் அழுகுரல்கள்,,,!

அங்கங்கள் துண்டுகளாய்ச் சிதறியது
தாயில்லாக் குழந்தை பாலுக்கு அழுதது
பசியும் பட்டினியும் பலவுயிர் மாண்டது
உலகமே கைகட்டி வேடிக்கை பார்த்தது,,!

என்ன பிழை செய்தோம் நாங்கள்
வாழும் சுதந்திரம் தானே கேட்டோம்
அடிமை வாழ்வு வேண்டாமென,,
அகிம்சை வழியில் கூடப் போராடினோம்,,!

கேட்டவரம் கிடைக்கவில்லை
பச்சைக் குழந்தைகள் பிழை என்ன
எல்லா உயிர்களையும் கொன்ற பாவிகளே
நிம்மதியாய் நித்திரை வருகிறதோ,,,!

வரலாறு படைத்தவன் தமிழன்,,
வரலாறாய்ப் போவானென எண்ணாதே
காலமும் ஒருநாள் மாறும் நினைவிலிருத்து
கொண்ட கொள்கை மண்ணில் மாளாது,,,,!

புறாவுக்காகத் தன் சதையைக் கொடுத்து
நீதி வழங்கியவன் தமிழ் மன்னன்,,
துடிதுடித்து ஆயிரமாயிரம் உயிர்கள் ஊசலாட
ஐ நா சபையும் அடங்கி வேடிக்கை பார்த்ததே,,!

அத்தனைத் துரோகமா நாம் செய்தோம்,
யார் குடியை நாம் கெடுத்தோம்,,,
இறைவா முள்ளிவாய்க்கால் முடிவல்ல,,,,,
கொன்றவர்களைத் தேடுகிறது முள்ளிவாய்க்கால்,,,!!!



புவனா சற்குணம்

நினைவோடு நிழலாடும்
வலி சுமந்த நாட்கள்
புதையுண்டு போன உயிர்களின்
புதைகுழிகள் இன்றும் பேசுது பல கதை
தென்றலும் வெந்தணலாகி
வெந்து நொந்த நாட்கள்

செங்குருதி ஆறான தாய்நிலம்
கருமேகம் சூழ்ந்தது வான்வெளி
அலைமோதி ஆர்ப்பரித்த மக்கள் கூட்டம்
நிலைதடுமாறிய அவலம்
ஊர்விட்டு திசைதெரியாது ஓடி
மரநிழலும் கூடாரங்களும் தஞ்சமானது

பனையும் தென்னையும் தலையாட்டி
குடைவிரித்த அழகும்
குண்டுமழையில் எரிந்து சாம்பலாகி
வயல்வெளியும் பசுஞ்சோலையும் பாலையானதே
கைநிறைந்த வளங்களைத் தொலைத்து
நலமின்றித் தவித்துக் கதறியது

விலைமதிப்பில்லா உயிர்களைத் தன்வசமாக்கி
கொடுமைகள் மட்டும் தலை விரித்தாட
வடுக்களை நிரந்தரமாகி
கூக்குரலும் ஒப்பாரியும் கேட்க
பாரமுகமான உலகை எண்ணிப் பொங்கி வெடித்த நெஞ்சு

பிஞ்சு நெஞ்சங்களின் கண்ணீரும்
தலைவனை எண்ணி ஓலமிடும் மகளிரும்
மகனைப்பிரிந்து உலகை மறந்த அன்னையும்
எண்ணிலடங்கா உயிர்களைக் காவுகொண்ட
அந்த நாட்கள்.. வரலாற்றில் பதிந்த தடயங்கள்

நிரஞ்சலா நிரா
நெதர்லாந்து



நாம் கண்ட தமிழீழத்தைத் தரணியில் புதைத்த
தறுதலைகளின் தரம்கெட்ட கேவலமே இது...

பாரதியின் உரையைப் பாரினில் நடத்தினோம்..
பண்பாட்டின் உலக சிகரமானோம்..
அதை அழித்த சதிகாரரின் கையில் அகப்பட்டநிலமே...

பெண்களின் கற்பை சூறையாடுவோருக்கும்
துரோகத்திற்குத் துணைபோவோருக்கும்
துப்பாக்கி பதில் சொன்னது..
அந்த பதிலை அடக்கி ஒடுக்கிய இடமே..

சுய உரிமைக்கு உரக்க குரல் கொடுத்த
எமது குரலை நசுக்கி உரிமையை முடக்கி
தொடர் அடிமையாக்கிய இடமே...

எல்லாவற்றையும் இழந்து கையுயர்த்திய எம்மை.
கையைக்கட்டி படுகொலை செய்த
உலகவல்லரசுகளின் சதிநடந்த நிலம்...

சரணடைந்த மக்களைப் பாலியல் நாசத்துக்கு உட்படுத்திய
நாய்கள் ஒன்றாக இணைந்து
ஓலமிட்ட இடமே முள்ளியவாய்க்கால்.

சுவிஸ். துரை. சுவேந்தி



தொன்மையும், இளமையும் இரண்டறக் கலந்த
புண்ணிய மொழியினமே,
தொல்லையும், துரோகமும் சுமப்பதே உந்தன்
வரலாற்றுப் பாதையுமே,

கள்ள மனமேந்தி விசயனும் அன்று
இலங்கையில் கால்பதித்தான்,
அவன் உள்உறங்கிய நரியினை மறந்து
சகமனிதனாய் உரிமைகள் நாம் கொடுத்தோம்,

உறங்கிய நரிகளும் விசத்தினை உமிழ
சதிகாரக் கூட்டமாய் கூடிநிற்க,
மனிதத் தன்மையில்லா அவ்வினத்தினரிடமோ
செய்நன்றியை நாம் பார்த்து நிற்க,

துரோக அணுக்களால் உருவான சிங்களவன்
உண்மை நரிகுணம் வெளிகசிய,
பண்டார வன்னியர் முதல் நவீனயுக கரிகாலன் வரை அந்நரிகளை
எதிர்த்து வாள் சுழற்ற
நீதியும்,நேர்மையுமற்ற சிங்களவனிடம்
போர்முறை மட்டும் விதிவிலக்கா?

மறைந்துநின்று முதுகில் குத்த  உலக
அரசியல்வியாதிகளுடன் கைகோர்ப்பு,
அழகிய தமிழ்நகரங்கள் மீது கந்தகக் குண்டினை வீசி
சிங்களவன் அரக்க செயலில் திளைப்பு,
கிள்ளைத்தமிழ் பேசிய அழகிய
எம் தம்பி தங்கையர் முள்ளிவாய்க்காலில்
உலக கோரமுகத்தின் சுவடினைத் தாங்கி
இன்றோ சவக்குழியில்?!

பால தியாகராஜன்,
கோவை.



முள்ளிவாய்க்காலில் வீழ்த்தப்பட்டது
வீரத்தின் விதைகள் - ஆமாம்
இங்கே விதைக்கப்பட்டது விதைகள்!
உரிமை விதைகள் ஒருபோதும் உறங்கா
மண்ணைக் கிழித்துக்கொண்டு
ஒருநாள் மேலே எழும், வளரும்.
அன்றே தமிழ்ஈழ கனவுகள்,
நனவாகும் அற்புதம் காண்போம்!

களத்தில் வீர சாகசம் புரிந்து,
வீரத்தின் விளைநிலத்தில்,
வீழ்ந்த உறவுகள் சுவாசித்த,
காற்றைத் தீர்க்கமாய் சுவாசித்தே...
வளரும் வழிமிகு அமையும்.
அற்புதம் அங்கே நடக்கும்!
ஆனந்தம் பெருகும் நம்மில்,
தமிழீழம் காண்போம் அன்று!

கண்ணீரும் இரத்தமும் சதையுமாக,
நாம்தந்த அன்றைய சுவாசம்;
வீண்போகாது... வரலாறு சமைத்தோம்!
வித்திட்டோம் வீரர்களை மண்ணில்.
சேர்த்தே விதைத்து இருக்கின்றோம்...
நாங்கள் விதைத்தது விதைகள்!
வளரும் அதுநல் மரமாக...
தமிழீழம் தனி நாடாக!

கவிவாணன் தமிழ்நெஞ்சம் அமின்
பிரான்சு



நரகத்தை... அனுபவித்த நொடிகள்

பாதி வாழ்க்கையைப்
பதுங்கு குழியிலே கழித்த நாட்கள்
நட்சத்திரங்களுக்குப் பதிலாக
எரிகுண்டுகள் அலங்கரித்த வானம்
இடிமின்னல்களின் சத்தங்களையும்
மிஞ்சும் குண்டு வெடிப்புகள்

ஈழமெங்கும் இரத்தக் கறைகளினால் உறைந்தே போனது
உயிருள்ள உடல்களும் வதைக்கப்பட்டு புதைக்கப்பட்டன
கல்லறைகளுள் கல்வெட்டாய்ப் போனது பலர்கனவுகள்
பச்சிளம் பாலகர்கள் செய்த பாவம் நானறியேன்
வயது பால் வித்தியாசமின்றி குண்டுகள் துளைத்ததே

ஊண் உறக்கம் மறந்துபோனப் பொழுதுகள்
அடுத்த நிமிடம் யார் தலைக்கு வேட்டு
எங்கே போவது எங்கே நிற்பது
எவருக்கு உதவுவது என்றே
பந்த பாசங்களும் பரிதவித்தே போனது
திக்குத் திசைகள் யாதும் என்னவென்றே
அறியாமல் பயணம் தொடர்ந்தது

விடுதலைக்கு என்றும் நாங்கள் எதிரியல்ல..!
முள்ளிவாய்க்கால் இன்று வரலாற்றின் சுவடானது..!
அதன்தாக்கம் எங்களின் இதயங்களில் வடுவானது..!

ரிம்ஸா டீன்
இலங்கை



நடுவானம் முழுவதும் குண்டுகள் வாரிஇறைக்க
நடப்பதறியா எம்மக்கள் நடுநடுங்கிப் பதுங்க
வெண்ணிறப் புழுதியும் செந்நிற வாசம்வீச
ஓலமிட்டபடியே பால்புட்டியைக் கையிலேந்திய பாலகன்...

அள்ளியெடுக்கவும் ஆளில்லை சொல்லியழைக்கவும் ஆளில்லை
முள்ளிவாய்க்கால் அன்று கொள்ளிவாய்க்கால் ஆனது...
ஈழமண் அன்று ஈனசுரம் பாடியது...
ஈக்கள் மொய்த்திட பூக்களும் இரத்தவாடை வீசியது...

சிங்கள வீரன் சிங்கமெனக் கர்ஜிக்க
வெண்கலக்குரல் கொண்ட யென்தமிழன்
புண்கலத்தினிடையே கண்கசக்கி
அழுவதற்கும் குரலின்றி அணங்கிக் கொண்டிருந்தான்...

கூடெரிந்த பறவைகளும் காலுடைந்த விலங்குகளும்
நாதியற்ற பிள்ளைகளும் வலியின் உச்சத்தில்
கொஞ்சம் கொஞ்சமாய்ச் செத்துக் கொண்டிருந்த உயிர்களும்...

ஓலம்... ஓலம்... ஓலம்...
எங்கும் ஓலம்...

மூன்றுலட்சம் தமிழனை அறுத்தால் -அவன்
ஆணிவேர் அறுந்திடு மோடா...
ஊன்றுகோலாய் தமிழுணர்விருக்க - உன்
குண்டுகளும் வெறும் ஊதுபத்தி தானடா...

தமிழச்சியின் மானம் பறிபோயினும் - அவள்
உனக்கஞ்சிப் போவா ளோடா...
தமிழ் பாலருந்திய எம்பிள்ளைகள் - நாளை
பதில் கூறிடுவர் தள்ளியேநீ யிருடா...!!!

ராஜிலா ரிஜ்வான்



செம்மணல் தேகம் கொண்ட  வன்னி மகளே
செங்குருதி கடலில் குளித்த  தமிழனின் தாய் மடியே !

காயம் ஆறவில்லையம்மா...
கண்ணீரும் வற்றிடவில்லையம்மா....
கதியிழந்து தவிக்கும் உணர்விதம்மா !

பகைவனவன் எறிகணைகள்
தலைகளைக் கொய்தபோது
தாயே நீ தவித்திருப்பாய்
தடுமாறித் துடித்துத் துவண்டிருப்பாய் !

இழியவரின் இழிசெயலால்
உடல்கள் உன் மடி சாய்ந்தபோது
உரக்க அழுதிருப்பாய்
உணர்வுகளால் கொதித்திருப்பாய் !

வான் மழைக்குண்டுகளால் வதையுண்டது
நாமல்லவா? காடையரின் காமப்பசிக்குக்
கற்பு சிதையுண்டது நம் இனமல்லவா?

உணர்வு கொந்தளிக்க உள்ளுக்குள்ளே தீ வளர்த்தோம்....
தமிழினத்தின் கருவறுத்த இழியவனின் கதை முடிப்போம் !

அன்னை உன் மீது
அழுது புரண்டிடத்தான் வந்தோமம்மா
வாசமிழந்த வன்னி மண்ணே
உன்மேல் சபதம் செய்தோமம்மா...

நெஞ்சில் உரமுண்டு செந்தனலாய் தீயுண்டு
எம் இனம் ஒருநாள் வெல்லும் என்று
உன் மீது ஆணை செய்தேன்  நான் இன்று...!

அன்பழகி கஜேந்திரா, ஈழம்.



கனவுகள் நிறைந்த வளமிக்க பூமிதான் அது...
அது ஒரு காலத்தில்...

சிறுமழலைகளின் தளிர்மேனிகள் ஓடியாடி
விளையாடி மகிழ்ந்த வளமிக்க பூமிதான் அது
அது ஒரு காலத்தில்...

சுற்றிய கடலும் சிற்றாடையாய்தென்னை மரங்கள்
அடர்ந்தெழும் கரையாய்அழகுறும் நன்னாடு அது
அது ஒரு காலத்தில்...

மகரந்தங்கள் நிறைந்த அப்பூமி...
கந்தகப்பூமியானது ஐயோ!
குண்டுமழைப் பொழியகுழந்தைகளும்
முதியோர்களும் கொத்துத் கொத்தாக
மடிந்த பூமியாய் மாறிப் போனதே...

ஈராயிரம் ஆண்டுகள் இருந்தமிழை வளர்த்த பூமி
இன்று இரண்டுலட்சம் உயிர்களைப் பழிவாங்கி
இருண்ட பூமியானதே...

ஐநா மன்றம் நீதிநெறியின்றி அந்நியமாய்ப் போனபின்பு
எம் தொப்புள்கொடி உறவுகளுக்கு...
என்ன பதில் தரப் போகிறது..
இந்த உலகமும்.. இந்த அறமும்..

முள்ளிவாய்க்கால் வலிகள் என்றும்
முள்ளாய் குத்தும் இதயத்தில்...
இருப்பினும் மலரும் தமிழீழம்
இந்த முள்மீதுதான்...

முனைவர்.
பெண்ணியம் செல்வக்குமாரி,
புதுச்சேரி.



நாற்சீர் விருத்தம்.
(தேமா.. புளிமாங்காய்.. தேமா... புளிமாங்காய்)

ஊரி விளையாடும் உப்புக் கடலோரம்
சோரி தனிலாடிச் சோர்ந்து விழுந்தீரே
ஏரிக் கடலோடு ஏங்கிச் சரிந்தேநீர்
மாரிக் களத்தின்கண் வாழ்வை முடித்தீரே!

மாயோன் வரவில்லை மாந்தர் துயர்தீர்க்கச்
சேயோன் வரவில்லைச் சிங்கச் செறுவெல்ல
கோயில் குளமாடிக் கொண்ட பயனென்ன?
காயல் நிலந்தேடி காயம் தொலைத்தீரே!

காயும் பெருமுள்ளிக் கால்வாய்க் களந்தன்னில்
பாயும் புலிவீரர் பாய்ந்தும் பயனென்ன!
தாயும் இறந்தாளே தந்தை தொலைந்தாரே
சேயும் மணல்தன்னிற் சேர்ந்தே புதைந்தானே(ளே)!

1.சோரி... குருதி,
2.ஏரிக்கடல்... நந்திக்கடல்,
3.மாரிக்களம்... அழிவுக்களம்,
4.காயல்.... உப்பங்கழிமுகம் (வட்டுவாகல்)

பாவலன் வயலூர்ப்புவன்,
தம்பலகாமம்,
திருகோணமலை, இலங்கை.



முள்ளிவாய்க்கால் முடிவல்ல
வீழ்த்தப்பட்ட
வீரத்தின் விதைகள்
இங்கே
விதைக்கப்பட்டன!

விதைத்தவன் உறங்கினாலும்
விதைகள்
ஒருபோதும் உறங்காது
முட்டி மோதி
மண்ணைக்கிழித்துக்கொண்டு வளரும்..

தமிழ்ஈழ தாயக கனவுடன்
களத்தில் களமாடி
வீரத்தின் விளைநிலத்தில்
வீழ்ந்த எம் தமிழ் உறவுகளின்
மூச்சுக்காற்றை
சுவாசித்தே
வளரும்..

தண்ணீரா விட்டு வளர்த்தோம்
கண்ணீரும்
இரத்தமும்
சதையுமாக மண்ணில் வீழ்ந்தோம்
கல்லறைகளை இடித்தாலும்
மண்ணோடு மண்ணாக
கலந்த எம் மாவீரர்களை
எதைக்கொண்டு இடிப்பாய்..?

நீங்கள்
வீழ்த்தியது மனிதசதைகள்
நாங்கள் விதைத்திருப்பது
விதைகள்..

ஈழபாரதி
பிரான்சு



ஈழம் மிளிர்ந்தது எம்மினம் மகிழ்ந்தொழுக.!
கரிகாலன் கட்டிய சேனைக்குள்ளே பூக்களாய்.!
முப்படை கண்ட எம் தமிழீழ மண்ணிலே!
இப்படியொரு அவலம் எண்ணிடத்தான் முடியவில்லை.!

நந்திக் கடலும் நனைந்தது குருதியிலே!
நாலாபுறமும் குண்டுமழை பொழிந்தது எம்மேலே.!
முள்ளிவாய்க்காலில் எம்மினம் மூச்சிழந்து போனதே.!
பல்லாயிரம் உயிர்களைப் பகை வந்து கொன்றொழித்திட.!
பூவும் வேருமாய் மண்ணில் புதையுண்டு போனதே.!
புத்த பகவான் பெத்தபிள்ளை புத்தியின்றிப் போனதால்.!

உரிமை கேட்ட மண்ணில் உதித்த பூக்களை.!
மிதித்தே கொன்றதை நினைத்தே சாகின்றோம்.!
உயிரற்ற அன்னையுடலில் பாலூட்டிய பச்சிளங் குழந்தையின்.!
நிலைகண்டு மனம் கருகித்தான் போனதையா.!
உரிமை கேட்ட என் உறவுகளும் மண்ணிலே.!
உயிரற்ற உடல்களாய் தெருவெல்லாம் பிணவாடை வீசிட.!

பூத்திடாத மலர்களைக்கூட பகைவன் பொசுக்கினானே.!
பிணங்களோடும் உறவுகொண்டு பிணந்தின்னிப் பேயானானே.!
எண்ணிலடங்கா கொடுமையில் எத்தனை உறவுகள்.!
மண்ணிலே உயிருடன் மாண்டுதான் போனதென்ன.?

கொத்துக் குண்டுக்குக் குற்றுயிராய் ஆனோம்.!
குருதி வழிந்தோட குழிக்குள்ளே பிணமானோம்.!
முள்ளிவாய்க்கால் முடிவில்லை பகையே அறிந்திடு.!
விதைத்த ஒவ்வொன்றும் விருட்சம் கொள்ளும் நாளை விடியலுக்காய்.!

ஈழவன் தாசன்
தமிழீழம்.





இனவெறித் தாக்குதலில் இருப்பிடம் விட்டு உடுத்திய ஆடையுடன் இடம்பெயரும் ஈழத்தமிழ் உறவுகள் (புதுக்குடியிருப்பு)



சிங்கள இராணுவத்தின் எறிகணைத் தாக்குலில் படுகாயமுற்ற குழந்தையோடு தாய் (புதுமாத்தளன் பகுதி)



விமானத் தாக்குதலில் படுகாயமுற்ற நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கும் தாதியும் உறவும். ( புதுக்குடியிருப்பு)



கொத்துக்குண்டுக்கு இரையான ஈழத்தமிழ் உறவுகளின் உயிரற்ற உடல்கள் (முள்ளிவாய்க்கால் பகுதி)



விமானத்தாக்குதலில் (கிபிர்) பிய்த்தெறியப்பட்ட இளம் குருத்துக்கள் சடலங்களாய் (முள்ளிவாய்க்கால் பகுதி)



காயமுற்ற உறவின் உடலை காவிச் செல்லும் உறவுகள் (முள்ளிவாய்க்கால் பகுதி)



கொடூரமான இனவழிப்பினைச் செய்த சிங்கள அரசின் இறுதி நடவடிக்கையில் உயிரற்ற பல்லாயிரம் உடல்களைக் குழிதோண்டிப் புதைக்கும் முள்ளிவாய்க்கால் பகுதி.



எறிகணைத் தாக்குதலில் சிக்குண்டு சிதைந்து போன சிறுமியின் உடலோடு ஓர் உறவு (முள்ளிவாய்க்கால் பகுதி)




காயமுற்ற உறவுகளைத் தெருவோரம் குடிலமைத்து முதலுதவி செய்யும் பகுதி (முள்ளிவாய்க்கால்)



இறுதி யுத்தத்தின் போது பொது மக்களைக் கைதிகளாக்கி முகாமுக்குள் சிறைவைத்த பகுதி (வவுனியா)



இனவழிப்பின் இறுதி நாளில் முப்படை கொண்டு நிர்மூலமாக்கப் பட்ட முள்ளிவாய்க்கால்



2009 ம் ஆண்டு ஈழத்தில் நடந்த இறுதி யுத்தத்தில் ஒன்றரை லட்சம் உயிர்களைக் கொன்று குவித்த முல்லைத்தீவின் ஒரு பகுதி கடற்கரையோடு சேர்ந்த முள்ளிவாய்க்கால் பகுதி